பக்கங்கள்:-27

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 17 | திங்கட்கிழமை | 31.03.2025 | அதிர்வு 238

## தலைப்பிறை தென்பட்டது! இன்று நோன்புப் பெருநாள்!!



இலங்கை வாழ் முஸ்லிம்கள் இன் று புனித ரமழான் பெரு நாளைக் கொண்டா டுகின்றனர்.

நாட்டின் 06

# 2029 ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றுவோம்

## அம்பாந்தோட்டையில் நாமல் சூளுரை



"2029 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றுவோம். அதற்கான பணிகளை முன்னெடுத்துள்ளோம்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

அம்பாந்தோட்டைப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அதிகளவான

06

# உள்ளூராட்சித் தேர்தலிலும் வரலாற்றுப் பெரும் வெற்றியை மக்கள் எமக்கு வழங்குவார்கள்!

## ஜனாதிபதி அநுர அதீத நம்பிக்கை

"இலங்கை அரசியல் வரலாற்றில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் எமக்கு வரலாற்று வெற்றியைப் பெற்றுத் தந்தார்கள். எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் அதைவிட சிறப்பான ஆணையை மக்கள் எமக்கு வழங்குவார்கள்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நம்பிக்கை வெளியிட்டார்.

06



# இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை: விரைவில் அமைச்சு மட்டத்தில் பேச்சு!

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

இலங்கை – இந்திய மீனவர்களுக்கிடையிலான அமைச்சு மற்றும் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடல் வெகுவிரைவில் நடைபெறவுள்ளது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இராமேஸ்வரத்தின் அனைத்து விசைப்படகு சங்க செயலாளர் சகாயம் தலைமையிலான இந்திய மீனவர் பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம் அமைச்சரை யாழ்ப்பாணத்தில் தேசிய

06






புதிய ஜனாதிபதியும் புதிய அரசும் இலங்கையில் பதவியேற்ற பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முதல் தடவையாக இலங்கை வருகிறார்.

அவருக்கு இது நாலாவது இலங்கை விஜயம். கடைசியாக 2019 ஜுன் மாதத்தில் ஒன்பது மணி நேரப் பயணமாக அவர் கொழும்பு வந்திருந்தார். மாலைத்தீவு சென்று அங்கிருந்து வரும் வழியில் கொழும்பில் சில மணி நேரம் தங்கிச் சென்றார் மோடி. ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் முடிந்து இரண்டு மாதங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட குறுகிய கால விஜயம் அது.

அந்த விஜயத்தின் போது விரைவில் செய்வோம் என்று கூறிச் சென்ற ஒரு பணியை இப்போது ஆறு ஆண்டுகள் கழித்தாவது அவர் நிறைவு செய்ய வாய்ப்புக் கிடைத்திருப்பதாகத் தெரிகிறது.

அந்தக் கடைசி வருகையின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை

06






# யாழ்ப்பாணம் - திருச்சி விமான சேவை மீண்டும் ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கும் திருச்சி விமான நிலையத்திற்கும் இடையிலான விமான சேவைகள் 47 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளன.

திருச்சியில் இருந்து மதியம் புறப்பட்ட விமானம், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த வேளை, விமான நிலையத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

நிகழ்வில் இந்திய துணைத் தூதரகர் சாய் முரளி உள்ளிட்ட துணைத்தூதராக அதிகாரிகள் , விமான நிலைய அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த விமான சேவையானது தினசரி மதியம் 1.25 மணிக்குத் திருச்சியில் இருந்து புறப்பட்டு 2.25 மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடையும். யாழ்ப்பாணத்தில் இருந்து மாலை 3.15 மணிக்குப் புறப்பட்டு திருச்சியை மாலை 4 மணியளவில் சென்றடையும்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் இருந்து சிங்கப்பூர் பயணிக்க விரும்புவோர் திருச்சி சென்று திருச்சி ஊடாக சிங்கப்பூர் பயணிக்க கூடியவாறான விமான சேவை திட்டமிடப்பட்டுள்ளமையால் கொழும்பு சென்று சிங்கப்பூர் செல்வதற்கான நேர விரயம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

















# யாழ். பலாலி விமான நிலையத்தை சர்வதேச தர நிலைக்கு மாற்றுவோம்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

"பழைய அரசுகளைப் போல் நாம் பொய் கூற மாட்டோம். யாழ். பலாலி விமான நிலையத்தை நான்கு மாதங்களுக்குள் சர்வதேச விமான நிலையமாக மாற்றுவோம்."

– இவ்வாறு சிவில் போக்குவரத்து விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

யாழ். வந்திருத்த அமைச்சர் நேற்று யாழ். பலாலி விமான நிலையத்துக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

விமான நிலையத்தை முதல் தடவையாகப் பார்வையிட்ட அமைச்சர், விமான நிலையத்தின் விஸ்தரிப்புகள் தொடர்பிலும், அதன் சேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்தார்.

ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கும்போது, "பழைய அரசு போல் நாம் பொய் கூற மாட்டோம். இந்த விமான நிலையத்தின் திட்டமிடல் வரைபடம் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. எனவே, அதனுடைய திட்டமிடலுக்கு ஏற்ப நான்கு மாதங்களுக்குள் இந்த விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக நிச்சயம் மாற்றியமைக்கப்படும்." – என்றார்.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், வைத்தியர் ஸ்ரீபவானந்தராஜா ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டனர்.
























# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# ஈஸ்டர் தாக்குதலுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இந்த ஏப்ரல் 21 இற்கு முன்னர் அம்பலப்படுத்தப்படுவராம்

## ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்றுத் தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு சபொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் என்பது தொடர்பான தகவல்கள் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

தெய்யந்தர பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி மீண்டும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நினைவுகூரப்படுகின்ற திகதிக்கு முன்னர் அதற்கு பொறுப்புக்கூறக்கூடிய குழுவொன்றை வெளியிடுவது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் முயற்சி செய்து வருகின்றது.

“அதை செய்ய வேண்டும் தானே? உங்களுக்குத் தெரியும் முன்னாள் அமைச்சர்கள் மூவர் இதுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் தலைமறைவாகிவிட்டார். அப்படியே மறைந்தே இருக்கட்டும் பதற்றப்படத் தேவையில்லை.” – என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி தலைநகர் கொழும்பு உள்ளிட்ட பல இடங்களில் இந்தக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மூன்று தேவாலயங்கள் மற்றும் ஐந்து நட்சத்திர உணவு விடுதிகள் சிலவற்றிலும், காலை 08:30 இற்கும் 09:15 மணிக்குமிடையில் இந்தக் குண்டுத் தாக்குதல்கள் நடந்தன.



இதில், வெளிநாட்டவர்கள், பொலிஸார் உட்பட குறைந்தது 272 பேர் வரை கொல்லப்பட்டனர். 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கொழும்பு கொச்சிக்கடை, மட்டக்களப்பு, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள தேவாலயங்களில் உயிர்த்த ஞாயிறு திருப்பலி நிகழ்வுகள் நடைபெற்ற போது குண்டுகள் வெடித்தன.

ஏனைய குண்டுகள் கொழும்பின் நடுப்பகுதியில் அமைந்திருந்த சங்கிரி–லா உணவகம், சினமன் கிராண்ட் உணவகம், கிங்ஸ்பரி உணவகம் ஆகிய மூன்று ஐந்து–நட்சத்திர உணவு விடுதிகளில் வெடித்தமை குறிப்பிடத்தக்கது.



# வலி. மேற்கில் தேர்தல் விதிமுறை மீறல்






(எஸ்.நிதர்ஷன்)

யாழ். வலிகாமம் மேற்கில் நடைபெற்ற தந்தை செல்வா விருது வழங்கல் வழங்கல் நிகழ்வில் உதவித் திட்டங்கள் வழங்கியபோது தேர்தல் விதிமுறைகளை மீறி நிகழ்வில் வேட்பாளர்கள் கலந்துகொண்டனர் என்று தெரிவித்து வட்டுக்கோட்டை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளரால் தேர்தல் திணைக்களத்துக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

இதையடுத்து தேர்தல் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நிகழ்வின் இறுதிப் பகுதியில் அந்த இடத்துக்கு விரைந்தபோது கட்சியைப் பிரதானப்படுத்தும் கொடிகளுடன் வேட்பாளர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டமையை அவதானித்தனர்.

தொடர்ந்து களநிலைமைகளை ஆராய்ந்த தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள், இது குறித்து வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலருக்கு அறிவித்ததுடன் விசாரணைகளை இன்று மேற்கொள்வதாகவும் தெரிவித்துச் சென்றனர்.

### யாழ். சிறையில் இருக்கும் கணவனுக்கு

# உணவு கொண்டு சென்ற மனைவி விபத்தில் சிக்கி பரிதாப மரணம்!

யாழ். சிறைச்சாலையில் இருந்த கணவனுக்கு உணவு கொண்டு சென்ற மனைவி விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

கைதடி – தச்சன்தோப்பு பகுதியைச் சேர்ந்த ஜெயரத்தினம் சுசீலா (வயது 57) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

மேற்படி பெண், கடந்த 13ஆம் திகதி சிறையில் உள்ள தனது கணவனுக்கு உணவு கொடுப்பதற்காக கைதடி வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார். இந்நிலையில், அதே வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று அவரை மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த மேற்படி பெண் சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் உயிரிழந்துள்ளார்.



அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# தடுப்பூசி ஏற்றிய குழந்தைக்கு காய்ச்சல் ஏற்பட்டு உயிரிழப்பு

யாழில் தடுப்பூசி ஏற்றிய ஆண் குழந்தைக்குக் காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் அந்தக் குழந்தை உயிரிழந்துள்ளது.

திருநெல்வேலியை சேர்ந்த 3 மாதங்கள் நிரம்பிய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

கடந்த 26ஆம் திகதி, குழந்தைக்கு 2 மாதங்களில் போட வேண்டிய தடுப்பூசி போடப்பட்டது. இந்நிலையில் 27ஆம் திகதி குழந்தைக்குக் காய்ச்சல் ஏற்பட்டது. இதனால் குழந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி 28ஆம் திகதி இரவு உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# ரி – 56 ரக துப்பாக்கியுடன் 2 தோட்டாக்கள் கண்டுபிடிப்பு

மாத்தளை பகுதியிலுள்ள காட்டுப் பகுதியிலிருந்து ரி – 56 ரக துப்பாக்கியும் 2 தோட்டாக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பயணப் பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவை கண்டுபிடிக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ரி – 56 ரக துப்பாக்கியையும் அதற்கான தோட்டாக்களையும் மறைத்து வைத்திருந்த சந்தேகநபரைத் தேடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரா. சம்பந்தன் தலைமையில் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் – விமானத்தில் ஏறுவதற்கு சற்று நேரம் முன்பதாக – ஒரு குறுகிய நேரம் – 10 நிமிடங்கள் – சந்தித்துப் புறப்பட்டார் இந்திய பிரதமர் மோடி. 'விரைவில் புதுடில்லி வாருங்கள், அங்கு ஆறுதலாக ஆற அமர இருந்து பேசுவோம்!' என்று கூறிச் சென்றார் பிரதமர் மோடி. ஆனால் அந்த ஆறுதலான சந்திப்பு இதுவரை இடம்பெறவே இல்லை. நன்றாக ஆறிப் போய் விட்டது.

சந்திப்புக்கான ஒரு தினத்தை இரண்டு வருடங்கள் கழித்து இந்தியத் தரப்பு வழங்கிய போது, அதற்கு இணங்கிப் பிரதிபலிப்புக் காட்ட கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் தவறியமையால் அந்தச் சந்திப்பு இடம் பெறாமல் போயிற்று என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு.

ஆறு ஆண்டுகளாக இடம் பெறாமல் விடுபட்ட அந்தச் சந்திப்புக்கு இப்போது கொழும்பில் பெரும்பாலும் வரும் ஐந்தாம் திகதி காலம் கூடிவருகின்றது எனத் தெரிகிறது.

முன்னர் மோடியை தமிழ் தேசிய கூட்டமைப்பாக சந்தித்தபோது அதில் தமிழரசுக் கட்சியினர் மூவர் பெரும்பாலும் இடம்பெற்றிருந்தனர். ஒருவர் – கூட்டமைப்புத் தலைவராக சம்பந்தன். மற்றவர் – தமிழரசுக் கட்சித் தலைவராக மாவை சேனாதிராஜா. அடுத்தவர் – கூட்டமைப்பின் சர்வதேச விவகாரங்களைக் கையாளும் தொடர்பாளராக சுமந்திரன். இந்த மூவருமே தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான்.

இப்போது தமிழர் தரப்பு வரும் ஐந்தாம் திகதி அளவில் இந்தியப் பிரதமரைக் கொழும்பில் சந்திக்கும் எனக் கூறப்பட்டுள்ள போதிலும் சந்திப்பு இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இப்போது தமிழரசுக் கட்சி சார்பில் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் செயலாளர் சுமந்திரன், நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன் ஆகியோர் சந்திக்கக் கூடும் எனக் கூறப்படுகின்றது. இவர்களில் மோடிக்குப் பரிச்சயமான அல்லது அவரை ஏற்கனவே சந்தித்த ஒரே நபர் சுமந்திரன்தான். சி.வி.கே.சிவஞானத்துக்கும் சிறிதரனுக்கும் இந்தச் சந்திப்பு இடம்பெற்றால் இதுதான் அவர்கள் இந்தியப் பிரதமர் மோடியை நேரில் சந்திக்கும் முதலாவது சந்தர்ப்பமாகும்.

பிரதமர் மோடிக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்த கடைசி இந்திய பிரதமர் ராஜீவ் காந்திதான். அவர் இலங்கைக்கு வந்து இப்போது 38 ஆண்டுகள் முடிந்துவிட்டன. அவருக்குப் பின்னர் இரண்டு தசாப்தங்கள் கழித்துப் பதவியேற்ற பிரதமர் நரேந்திர மோடி நான்காவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்கிறார்.

1987 இல் இலங்கை மீது அதீத அழுத்தம் செலுத்தி, இலங்கை – இந்திய ஒப்பந்தத்திற்குக் கொழும்பை வல்வந்தமாக இணங்கி வரப் பண்ணினார் ராஜீவ் காந்தி.

இப்போதும் அத்தகைய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றுக்குக் கொழும்பை சத்தம் சந்தடியின்றி, அழுத்தம் – நெருக்குதல் கொடுக்காமல், இணங்கிவரப் பண்ணி இருக்கின்றது நரேந்திர மோடியின் அயல் உறவுக் கொள்கை.

\+ \+ \+

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த தரப்புகளுக்கும் தேர்தல் ஆணையத்துக்கும் இடையிலான சந்திப்பு உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டல்படி நேற்று கொழும்பில் தேர்தல் ஆணையத்தில் இடம் பெற்றது.

வேட்பு மனுக்களில் இளம் வேட்பாளர்களின் வயதை உறுதிப்படுத்துவது தொடர்பான ஏற்பாடுகளில் ஏற்பட்ட குழப்பத்தினால் பல வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

சமர்ப்பிக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களை அத்தாட்சிப்படுத்தப்படுவது தொடர்பான குழப்பமே பல வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்குக் காரணம் என்பது வெள்ளிடைமலை.

பிறப்புச் சான்றிதழின் பிரதியை அத்தாட்சி படுத்தக்கூடிய ஓர் உத்தியோகத்தரினால் இந்த பிரதி உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் அப்பிரதியை ஏற்றுக் கொள்வது என்ற இணக்கப்பாட்டுக்கு தேர்தல் திணைக்களம் வந்திருப்பதாகத் தெரிகிறது. இது பற்றிய தனது இணக்கத்தை நாளை இவ்விடயம் சம்பந்தமான வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படும்போது தேர்தல் ஆணையம் தெரிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய முடிவைத் தேர்தல் ஆணையம் எடுத்தால், யாழ் மாவட்டத்திலும் கிளிநொச்சியிலும், வன்னியிலும் நிராகரிக்கப்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் – சங்குச் சின்னக் கட்சியின் – நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் யாவும் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தெரிகிறது.

ஏனைய காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பான விடயத்தில், நீதிமன்றத்தில் வாதம் நடத்தித் தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதில் தேர்தல் ஆணையம் தெளிவாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. அத்தகைய விடயங்கள் நீதிமன்றத்தில் வாதிக்கப்பட்ட பின்னரே தீர்வு காணப்படும் என்று ஊகிக்க முடிகின்றது.

## தலைப்பிறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சில பகுதிகளில் ஷவ்வால் மாத தலைப்பிறை நேற்று தென்பட்டுள்ளமையால் இன்று புனித ரமழான் பெருநாளைக் கொண்டாடுமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்று மஹ்ரிப் தொழுகையின் பின்னர் நடைபெற்றது.

## இலங்கை - இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் காரியாலயத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் அமைச்சர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்பதை இந்திய மீனவர்கள் உணர்ந்தனர் என்பதை அறியமுடிந்தது.

எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்கும், இது தொடர்பில் அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தைகள் முன்னெடுப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய அமைச்சு மற்றும் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடல் எதிர்வரும் நாட்களில் நடைபெறும்." – என்றுள்ளது.

## 2029 ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளூராட்சி அதிகார சபைகளை நாங்கள் கைப்பற்றுவோம். 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி அதிகார சபைகளைக் கைப்பற்றியதை போன்று இம்முறையும் நாங்கள் அதிகாரத்தை கைப்பற்றுவோம்.

தேசிய பொருளாதாரத்தை கைப்பற்ற வேண்டுமாயின் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும். எமது ஆட்சியில் கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்திகளுக்கு விசேட திட்டங்களை முன்னெடுத்தோம். ஆகவே, கிராமிய மக்கள் கிராமத்தின் அதிகாரத்தை மீண்டும் எமக்கு ஒப்படைப்பார்கள்.

தேசிய பொருளாதாரத்தையும், கிராமிய பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் பல வாக்குறுதிகளை வழங்கியது. இருப்பினும் அந்த வாக்குறுதிகள் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. கிராமிய பொருளாதாரம் நவீனமயப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாகவுள்ளோம்.

விவசாயம் மற்றும் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு கடந்த காலங்களில் முன்னெடுத்த புதிய திட்டங்களுக்கு மக்கள் விடுதலை முன்னணியே எதிர்ப்பை வெளிப்படுத்தியது.

அரசின் செயற்பாடுகளுக்கு எதிர்க் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தற்போது அழைப்பு விடுக்கும் ஆளுங்கட்சியினர் தான் கடந்த காலங்களில் அரசின் அனைத்து திட்டங்களுக்கும் எதிராக வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

நாட்டின் நலனைக் கருத்திகல் கொண்டு எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம். இந்த அரசு ஆறு மாத காலப் பதவியை நிறைவு செய்துள்ளது. இருப்பினும் எவ்விதமான புதிய திட்டங்களும் இதுவரையில் செயற்படுத்தப்படவில்லை." – என்றார்.

## உள்ளூராட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"நாட்டையும், நாட்டு மக்களையும் முன்னோக்கி கொண்டு செல்வதற்கு நாம் செல்லும் வழியே உறுதியான வழியாக உள்ளது. எனவே, அந்தத் திசையை மக்கள் மாற்ற மாட்டார்கள். கடந்த தேர்தல்களின்போது எமக்கு வாக்களிக்காதவர்கள்கூட இம்முறை ஆணை வழங்குவார்கள்." – என்றும் அவர் கூறினார்.

திஸ்ஸமஹாராம பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"கிராமத்துக்குரிய அரசியல் தலைமைத்துவம்தான் பிரதேச சபை. அதன் அதிகாரமும் அரசு வசம் இருந்தால் திட்டங்களைச் சிறப்பாகச் செய்ய முடியும்." – என்றும் ஜனாதிபதி மேலும் கூறினார்.

# உப்பின் பெயரில் ஆனையிறவைத் தவிர்ப்பதற்கு அது ஒன்றும் உப்புச்சப்பற்ற இடப்பெயர் அல்ல!

## சுட்டிக்காட்டுகின்றார் பசுமை இயக்கத்தின் ஐங்கரநேசன்



இலங்கையில் உப்பளங்களை நிர்வகித்து வருகின்ற தேசிய உப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனம் (National Salt Ltd)) ஆனையிறவில் விளையும் உப்புக்கு றஜலுனு (Rajalunu) எனப் பெயரிட்டுள்ளது. இதுகாலவரையில் ஆனையிறவு உப்பு என விளிக்கப்பட்டு வந்த உப்பு றஜலுனு எனப் பெயரிடப்படும் அளவுக்கு, ஆனையிறவு ஒன்றும் உப்புச்சப்பற்ற இடப்பெயர் அல்ல. அது தமிழ் மக்களின் வரலாற்றில், வாழ்வியலில், பொருளியலில், போரியலில் பின்னிப்பிணைந்து அவர்தம் ஆன்மாவுடன் இரண்டறக் கலந்துவிட்ட பெயர் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனையிறவில் தயாரிக்கப்படும் உப்புக்கு "றஜலுனு" என்ற வர்த்தக நாமம் சூட்டப்பட்டிருப்பது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே, இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் அவர் குறிப்பிடுகையில் –

யானைகள் தாவர உண்ணிகள் என்பதால் அவற்றின் உடலில் உப்புச்சத்துப் பற்றாக்குறைவு ஏற்படும்போது அவை உப்பைத்தேடிச்சென்று உண்பது வழமை. ஆனையிறவு என்ற பெயர் நிலவுவதற்கு, வன்னிக் காட்டுயானைகள் உப்பைத் தேடிவந்த கடவை இது என்பதோடு, ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் வன்னியானைகள் ஏற்றுமதியின் பொருட்டு யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பாதையாக இது அமைந்தமையுமே காரணமாகும்.

ஆனையிறவுக் கடல் நீரேரிகளின் கரைகளில் உப்பு விளைவதை அவதானித்த ஆங்கிலேயர்கள் 1938இல் ஆனையிறவு உப்பளத்தை அமைத்தனர். இங்கு விளையும் உப்பை மூலப்பொருளாகக் கொண்டு 1954இல் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை உருவானது. உப்பளமும், இரசாயனத் தொழிற்சாலையும் யுத்தம் உச்சம்பெறும் வரைக்கும் ஆயிரக்கணக்கானவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வேலைவாய்ப்புகளை வழங்கியிருந்தன.

ஆனையிறவின் கேந்திர முக்கியத்துவம் காரணமாக 1760இல் போர்த்துக்கேயர்கள் தங்களது இராணுவத் தளமாக இங்கு கோட்டையொன்றை உருவாக்கினர். பின்னர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்று இலங்கையை ஆண்ட அந்நியர்களிடம் கைமாறிய இக் கோட்டை சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் வசமாகியது. 1952இல் இக் கோட்டை நவீனவசதிகளுடன் கூடிய இராணுவத் தளமாக வடிவமைக்கப்பட்டது.

ஆனையிறவுப் பாதையால் பயணிப்பது என்பது மரணத்தின் குகையினூடாகச் செல்வதற்கு ஒப்பானது என்று தமிழ் மக்கள் நடுங்கும் அளவுக்கு பின்னாளில் இங்கு அமைந்திருந்த சோதனைச் சாவடிகள் திகிலூட்டுவனவாக அமைந்திருந்தன. சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுவர்கள் இங்கு கொடும் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டனர் என்பதும், பின்னர் இக்கோட்டை விடுதலைப் புலிகள் வசமாகி நிர்மூலமாக்கப்பட்டதும் வரலாறு.

ஆனையிறவு இவ்வளவு முக்கியத்துவங்களோடு இடவமைவு காரணமாக இங்கு விளையும் உப்புக்கு முதல் தரமான உப்பு என்ற பெருமையையும் தேடிக்கொடுத்தது. ஆனால் இவற்றையெல்லாம் புறந்தள்ளி மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடாக றஜலுனு என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. உப்பில்லாப் பண்டம் மட்டுமல்ல, அது றஜலுனு உப்பாக இருந்தால் தமிழ் மக்களின் மனோவுணர்வில் அதுவும் குப்பையில்தான். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீட்டின் மீது பெட்ரோல் குண்டு தாக்குதல் ஆறு வயதுச் சிறுவன் பலி; பெண் காயம்!

## களுத்துறை ராஜாவத்த பகுதியில் சம்பவம்

களுத்துறை, கமகொடபர, ராஜாவத்த பகுதியில் உள்ள ஒரு வீட்டின் மீது நடத்தப்பட்ட பெட்ரோல் குண்டு தாக்குதலில் 6 வயது சிறுவன் தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்தான்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்கள் நடத்திய தாக்குதலில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த சிறுவனும், வீட்டில் இருந்த 28 வயதுடைய பெண்ணும் காயமடைந்தனர்.

அவர்கள் இருவரும் களுத்துறை போதனா மருத்துவமனையில் அவசரமாக அனுமதிக்கப்பட்டனர். படுகாயமடைந்த சிறுவன், கொழும்பில் உள்ள லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று மாலை உயிரிழந்துள்ளான்.

இறந்த குழந்தையின் தாய் வெளிநாட்டில் இருக்கின்றார் எனவும், அதனால் குழந்தையின் தந்தை வேலையிலிருந்து திரும்பும் வரை பெட்ரோல் குண்டுத் தாக்குதலுக்கு ஆளான வீட்டில் இருந்த பெண்ணே குழந்தையைப் பராமரித்து வந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த பெண் தற்போது களுத்துறை போதனா



மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை. மேலும் தாக்குதலுக்கான நோக்கம் குறித்து எந்த தகவலும் வெளியிடப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் களுத்துறை தெற்கு காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதிச் சுதந்திரம் சாத்தியமா?

ஜனநாயகம், நீதி மற்றும் நீதித் துறை சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் சட்டத் தொழில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்று பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 51 ஆவது ஆண்டு விழாவில் உரையாற்றிய அவர் “நீதித்துறையுடன் இணைந்து செயல்படும் வலுவான மற்றும் சுதந்திரமான சட்டத்தரணிகள் சங்கம், நீதி அசைக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது” என்று கூறினார்.

நீதித்துறை சுதந்திரத்திற்கு ஏற்படும் எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் எதிராக சட்ட வல்லுநர்கள் உறுதியாக நிற்க வேண்டும் என்றும் பிரதம நீதியரசர் வலியுறுத்தினார்.

ஆனால், இலங்கை நீதித்துறை மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய வகையில் வலுவானதாகவும், பக்கச் சார்பற்றதாகவும், உண்மையான நீதியை உறுதிப்படுத்தக் கூடியதாகவும் உள்ளதா என்பதுதான் கேள்வி.

இலங்கை நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள 1.1 மில்லியன் வழக்குகள் உள்ளன. அவை பெரும்பாலும் ஆண்டுக் கணக்கில் தேங்கிக் கிடக்கின்றன.

இலங்கையில் நீதியான தீர்வை பெறுவதற்காக நீதிமன்றங்களை நாடுவது என்பது காலத்தை இழுத்தடித்து நேரத்தை விரயமாக்கும் முட்டாள்தனமான வேலை என்ற கருத்து நிலைபாடுதான் மக்கள் மத்தியில் ஆழ ஊடுருவி நிற்கின்றது. அது தான் மக்களின் அனுபவப்பாடம். பட்டறிவு.

இலங்கையில் நீதித்துறை என்பது - வழக்காடல் என்பது - அதல பாதாளத்தில் நம்மை நாமே விழுத்தும் வேலை. அதற்குள் விழுந்தால் மீண்டு வர பல வருடங்கள் எடுக்கும். முழு வாழ்க்கையையுமே தொலைக்க வேண்டி வரும் என்ற அச்சுறுத்தலான நிலையைத் தான் இலங்கையின் நீதித் துறை இதுவரை காலமும் கட்டி வளர்த்து, சம்பாதித்திருக்கின்றது.

‘தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதி ஆகிவிடும்’ என்பது நீதித்துறையின் அடிப்படைக் கோட்பாடு. அந்த அடிப்படைக் கோட்பாட்டையே மறந்துதான் இலங்கையில் நீதித்துறை செயல்படுகின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அப்படி தாமதமாவதை நியாயப்படுத்த பல விடயங்களைக் கூறலாம். ஆயினும், எது எப்படியாயினும், உரிய காலத்தில் கிடைக்காத நீதி என்பது நீதியே அல்ல. அதுதான் உண்மை. அதுவே யதார்த்தமும் கூட.

ஒரு சாதாரண வளர்ந்த நாட்டில், ஒவ்வொரு ஒரு மில்லியன் மக்கள்தொகையிலும் குறைந்தது 30-40 நீதிபதிகள் உள்ளனர். ஆனால், இலங்கையில் ஒவ்வொரு 1 மில்லியனுக்கும், 19 நீதிபதிகள் மட்டுமே உள்ளனர். சட்டமா அதிபர் துறையில் பணியாளர் பற்றாக்குறை பிரச்சினை நீடிக்கின்றது. சுமார் 459 அரசு சட்டத்தரணிகள் பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளன . 93,000 குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

மறுபுறத்தில் சட்டதரணிகள், நீதிபதிகளின் தொழில் தர்மம் தொடர்பில் எழுத்தில் வெளிவராத - எழுத்தில் வெளிப்படுத்தட்டப்பாதுகாப்பற்ற-பலஅதிர்ச்சி விவகாரங்கள் உண்டு.

இவற்றுக்கு மத்தியில் ஜனநாயகம், நீதி மற்றும் நீதித்துறை சுதந்திரத்தைப் பாதுகாப்பது என்ற பிரதம நீதியரசர் அம்மணியின் நம்பிக்கை - எதிர்பார்ப்பு - இலங்கையில் சாத்தியமற்றதாகவே தோன்றுகின்றது.

# 2026 சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க. ஆட்சி அகற்றப்படும்

## மத்திய அமைச்சர் அமித் ஷா கருத்து



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. ஆட்சி அகற்றப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் தனியார் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில்,

“ஒரு காலத்தில் தென்னிந்தியாவின் முற்போக்கான மாநிலமாக தமிழகம் கருதப்பட்டது. ஆனால் தி.மு.க. அரசின் தவறான கொள்கைகளால் தமிழகம் தடுமாறி குழப்பத்துக்கு ஆளாகி நிற்கிறது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை கருத்தில் கொண்டு தமிழக மக்களின் கவனத்தை திசை திருப்ப முதல்வர் ஸ்டாலின் முயற்சி செய்கிறார். இதற்காகவே அவர் தேசிய கல்வி கொள்கைக்கு எதிராக பேசுகிறார்.

தமிழக அரசு முதலில் தேசிய கல்வி கொள்கையை ஏற்றுக் கொண்டது. பின்னர் திடீரென ஏற்க மறுக்கிறது. இதுதொடர்பான ஆவணங்களை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறோம்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கி வருகிறது. ஊழல் விவகாரங்கள் காரணமாக ஆளும் தி.மு.க. அரசு மீது மக்கள் ஏற்கெனவே கடும் அதிருப்தியில் உள்ளனர். முதல்வர் ஸ்டாலின் தொடர்ந்து வாரிசு அரசியலை ஊக்குவிக்கிறார். அவர் தனது மகன் உதயநிதியை முன்னிறுத்தி வருகிறார். இந்த பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பவே தேசிய கல்வி கொள்கையை தி.மு.க. எதிர்க்கிறது. இந்த உண்மை தமிழக மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

தாய் மொழி கல்விக்கு தேசிய கல்வி கொள்கை முன்னுரிமை அளிக்கிறது. இதை அமல்படுத்தினால் தமிழில் கல்வி கற்பிக்கப்படும். பொறியியல், மருத்துவம் சார்ந்த உயர் கல்வி படிப்புகளும் தமிழில் கற்பிக்கப்படும். பொறியியல், மருத்துவ படிப்புகளுக்கான பாடநூல்களை தமிழில் மொழிபெயர்க்க நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். ஆனால் அவர்கள் இதுவரை ஏற்கவில்லை.

தெலுங்கு, மலையாளம், மராத்தி, குஜராத்தி மொழிகளில் பொறியியல் கல்வி கற்பிக்கப்படுகிறது. சுமார் 1,500 பட்டப்படிப்பு நூல்கள் 13 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உள்ளன. மத்திய பல்கலைக்கழகங்களின் இளங்கலை படிப்பு சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வு 13 மொழிகளில் நடத்தப்படுகிறது. ஆனால் தி.மு.கவின் எதிர்ப்பால் தமிழில் இந்த நுழைவுத் தேர்வை நடத்த முடியவில்லை.

மக்களவை தொகுதி மறுவரையறை தொடர்பாக மத்திய அரசு எதுவுமே அறிவிக்கவில்லை. ஆனால் தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் காரணமாக இதுதொடர்பாக தி.மு.க. பிரச்சினை எழுப்புகிறது. கடந்த 5 ஆண்டுகளாக தி.மு.க. அரசு ஊழலில் மட்டுமே திளைத்து வருகிறது. தற்போது திடீரென விழித்து மக்களவை தொகுதி மறுவரையறை குறித்து பேசுகின்றனர்.

மக்களவை தொகுதிகள் மறுவரையறை செய்யப்படும்போது யாருக்கும் அநீதி இழைக்கப்படாது. 0.0001 சதவீதம்கூட அநீதி இழைக்கப்படாது.

தமிழகத்தில் ஆட்சி நடத்தும் தி.மு.க, தமிழ் மொழிக்கு எதிராக செயல்படுகிறது. தி.மு.க. அரசின் ஊழல்கள் காரணமாக தமிழகத்தில் இருந்து இளைஞர்கள் வெளியேறி வருகின்றனர். தொழில் நிறுவனங்களும் வெளியேறி வருகின்றன. மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். எதிர்வரும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. ஆட்சி அகற்றப்படும். தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும். கூட்டணி தொடர்பாக அ.தி.மு.கவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. உரிய நேரத்தில் அறிவிப்பு வெளியிடப்படும்.

எதிர்வரும் 2047ஆம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க பிரதமர் நரேந்திர மோடி இலக்கு நிர்ணயித்து உள்ளார். இதற்காக மத்திய அரசு அதிதீவிரமாக உழைத்து வருகிறது. நாடு முழுவதும் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். இதை நிறைவேற்ற தொடர்ந்து முயற்சி செய்வோம். மணிப்பூரில் அமைதி திரும்பி உள்ளது. அந்த மாநிலத்தில் அனைத்து வணிக நிறுவனங்களும், சந்தைகளும் வழக்கம்போல செயல்படுகின்றன.” என்றார்.





# விஜய் ஆழமாக அரசியலை கற்றுக் கொண்டு பேச வேண்டும்

## தமிழிசை சௌந்தரராஜன் தெரிவிப்பு

மும்மொழிக் கொள்கையை மக்கள் மத்தியில் வலியத் திணிப்பது, மாநிலங்களின் தன்னாட்சி உரிமையைப் பறிக்கும் செயற்பாடு என தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் விஜய் இன்னும் கொஞ்சம் அழுத்தமாகவும், ஆழமாகவும் அரசியலை கற்றுக் கொண்டு பேச வேண்டும் என தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் வைத்தியர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

மும்மொழிக் கொள்கை தொடர்பாக விஜய் தெரிவித்த கருத்து தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த போதே தமிழிசை சௌந்தரராஜன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது விஜயின் திரைப்படங்கள் பல மொழிகளில் திரையிடப்படலாம், ஆனால் கற்றல் செயற்பாட்டிற்கு மாத்திரம் பல மொழிகள் வேண்டாம் எனக் கூறுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை எனவும் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், விஜய்யின் பேச்சில் தெளிவற்ற தன்மை காணப்படுவதாகவும் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.





# விளாடிமிர் புடினின் வாகனம் தீக்கிரை!

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் உத்தியோகப்பூர்வ சொகுசு limousine வாகனம் தீப்பிடித்து எரிந்துள்ளது.

மொஸ்கோவிலுள்ள பெடரல் பாதுகாப்பு சேவை தலைமையகத்திற்கு அருகில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த ரஷ்ய ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பில் மிகவும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த காரின் மதிப்பு 3,55,796 டொலர் எனக் கூறப்படுகிறது.

காரின் இயந்திரத்தில் முதலில் தீ விபத்து ஏற்பட்ட நிலையில், பிறகு அது மெல்ல உட்புறம் வரை பரவியுள்ளது.

இந்த கார் ரஷ்ய ஜனாதிபதி மாளிகையின் ஜனாதிபதி சொத்து முகாமைத் துறைக்குச் சொந்தமானது என்று கூறப்படுகிறது.

கார் திடீரென வெடித்துச் சிதறக் காரணம் என்ன, இதன் போது உள்ளே யாராவது இருந்தார்களா என்பது தொடர்பான தகவல்கள் ஏதும் இதுவரை வெளியாகவில்லை.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, அண்மையில் ஐரோப்பிய ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பொன்றின் போது ரஷ்யா ஜனாதிபதி இறந்துவிடுவார் என உக்ரைன் ஜனாதிபதி கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மியன்மாரில் மீண்டும் நில அதிர்வு

மியன்மாரில் நில அதிர்வு ஏற்பட்ட பிரதேசத்திற்கு அண்மையில் நேற்று மீண்டும் ஒரு நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மியன்மாரின் மெண்டலே பகுதியிலிருந்து 29 கிலோ மீட்டர் தூரத்தில் 35 கிலோ மீட்டர் ஆழத்தில் நில அதிர்வு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நில அதிர்வு 5.1 மெக்னிடியூட் அளவில் பதிவாகியுள்ளது.





# காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல்: 9 பேர் பலி உணவுக்கு தட்டுப்பாடு

காஸா மீது இஸ்ரேல் நடத்திய குண்டு தாக்குதல்களில் 5 சிறுவர்கள் உள்ளிட்ட 9 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், காஸா பகுதிக்கான உணவு விநியோகத்தை இஸ்ரேல் இடைநிறுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.


இதன் காரணமாக 10 நாள்களுக்குப் பின்னர் உணவுக்கு தட்டுப்பாடு நிலவக்கூடும் என உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எகிப்து மற்றும் கட்டார் முன்வைத்துள்ள புதிய போர் நிறுத்தத் திட்டத்தை ஹமாஸ் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் எதிர் முன்மொழிவை சமர்ப்பித்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.








# மியன்மாரில் மருத்து பொருள்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

## ஐ.நா. சபை எச்சரிக்கை

மியன்மாரில் ஏற்பட்ட நில அதிர்வை அடுத்துக் காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மருத்துவ பொருள்களுக்குக் கடுமையான தட்டுப்பாடு ஏற்படும் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

மியன்மாரில் கடந்த வெள்ளி கிழமை 7.7 மெக்னிடியூட் அளவில் ஏற்பட்ட நில அதிர்வினால் 1,600 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். 3,400 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன், பலர் இடிபாடுகளில் சிக்கியுள்ளதுடன் அவர்களை மீட்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.











# ஒற்றுமை நிலைக்கட்டும்!

## நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு




“ஈதுல் பித்ர் பெருநாளைக் கொண்டாடுகின்ற இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.” – என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அவரின் வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களால் ஒரு மாத கால நோன்பு நோற்று, தலைப்பிறை பார்த்ததன் பின்னர் கொண்டாடப்படும் ஈதுல்–பித்ர் பெருநாள், இஸ்லாமிய நாட்காட்டியில் மிக முக்கியமான சந்தர்ப்பமாகும்.

இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றான ரமழான் மாத நோன்பு, உலக ஆசைகளிலிருந்து தூரமாகி, அர்ப்பணிப்பு மற்றும் எளிமையுடனான முன்மாதிரி நடைமுறையை நிலைநிறுத்துவதன் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கின்றது.

உலகெங்கிலும் பசியால் வாடும் மக்களுக்கு தான தர்மம் செய்யவும், உள்ளத்தை கட்டுப்படுத்தும் திறனை வளர்த்துக் கொள்ளவும், இந்த மாதம் ஒரு சிறந்த வாய்ப்பாக முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களுடன் கூடிய முன்னேற்றகரமான இலங்கை தொடர்பில் இந்த நாட்டு மக்களின் அபிலாஷைகளை நனவாக்கி, சுதந்திரம், சமத்துவம், ஒற்றுமை மற்றும் கண்ணியம் நிலவும் ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப நாம் எடுக்கும் முன்னெடுப்பில் இஸ்லாத்தின் இந்த போதனைகள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமையும் என்று நான் நம்புகின்றேன்.

அதேபோல், பொதுமக்களின் நிதி மற்றும் அரச சொத்துக்களை அழிக்கும் அநாகரிகமான அரசியல் கலாச்சாரத்திற்குப் பதிலாக, எளிமை மற்றும் அர்ப்பணிப்புடன் மக்களின் உணர்வுகளை உணரக் கூடிய ஒரு அரசியல் கலாசாரத்தையும் பிரஜைகள் சமூகத்தையும் நாட்டில் கட்டியெழுப்புவதற்கான நமது முயற்சிகளில் ரமழான் மாத செயற்பாடுகள் ஒரு சிறந்த முன்மாதிரியாக அமையும்.

மத எல்லைகளைக் கடந்து, மனித நேயத்தையும் ஒற்றுமையையும் வலியுறுத்தும் சுயநலத்திற்குப் பதிலாக பரோபகாரத்தை ஊக்குவிக்கும் பண்டிகையான ஈதுல் பித்ர் பெருநாளைக் கொண்டாடுகின்ற இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறுமலர்ச்சி யுகத்திற்கான எதிர்பார்ப்புகள் நிறைவேறும் சமாதானம், நல்லிணக்கம் நிறைந்த இனிய ஈதுல் பித்ர் பெருநாளுக்கு வாழ்த்துகின்றேன். ஈத் முபாரக்!” – என்றுள்ளது.

# ரம்ழான் சிறப்பிதழ்

## அனைவரும் சுபீட்சத்தை நோக்கி முன்னேறுவோம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வாழ்த்து



ஒரு நாடாக, நாம் மீண்டும் பல சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், இந்த நிலையில் இருந்து அனைவரும் ஒன்றிணைந்து மீள்வதற்கான வழிகாட்டுதலை ரம்ழான் பண்டிகையில் இருந்து முன் மாதிரியாகக் கொள்ளலாம்.

தன்னைப் பற்றி மட்டுமல்லாமல் மற்றவர்களைப் பற்றியும் சிந்தித்துச் செயல்படுவதன் மூலம், அனைவரையும் உள்ளடக்கிய சுபீட்சத்தை நோக்கி நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இது தற்போதைய வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டு மீண்டும் சுபீட்சத்தை நோக்கிப் பயணிக்க உதவியாக இருக்கும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விடுத்துள்ள ரம்ழான் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


ஒரு மாத காலமாக நோன்பு நோற்று ஈதுல்-ஃபித்ர் பெருநாளைக் கொண்டாடும் இந்த வேளையில், உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கும் மத, சமூக, கலாசார செய்தியை வழங்கும் ரம்ழான் பெருநாள் தினத்தை முன்னிட்டு, அனைத்து இஸ்லாமிய சகோதரர்களுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

இஸ்லாமியர்களின் மத நம்பிக்கையில் பன்னிரண்டு மாதங்களில் ஒன்பதாவது மாதமாகக் கருதப்படும் ரம்ழான் மாதம், நன்மைதரும் மாதமாக அழைக்கப்படுகிறது.

இந்த மாதத்தில் ஒரு நாளைக்கு சுமார் 14 மணி நேரம் இறைவனுக்காக நோன்பு நோற்று, அனைத்துத் துன்பங்களையும் தாங்கி, தன்னைக் கட்டுப்படுத்தி, சமூகத்துக்கு நலன் பயக்கும் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை உருவாக்கத் தேவையான வழிகாட்டுதலை வழங்குகிறது. மேலும், இது தாராள மனப்பான்மை மற்றும் சமத்துவத்தின் மகத்தான செய்தியை உலகுக்குக் கொண்டு வரும் மிக முக்கியமான பெருநாள் பண்டிகையாகவும் குறிப்பிடலாம். - என்றுள்ளது.

# பாலஸ்தீன மக்களை முன்னிலைப்படுத்தி பிரார்த்தனைகளில் நாம் ஈடுபடுவோம்!

## பெருநாள் வாழ்த்துச் செய்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்



ஈதுல் பித்ர் பெருநாள் தினத்தில் பலஸ்தீன முஸ்லிம்களை முன்னிலைப்படுத்திப் பிரார்த்திப்போம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள "ஈதுல் பித்ர்" பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது பெருநாள் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

உலகெங்கும் வாழும் முஸ்லிம்கள் நோன்பு நோற்று, தொழுகைகளிலும் பிரார்த்தனைகளிலும் அதிகம் ஈடுபட்டு, ஏழைகளுக்கு ஈந்துதவி, நற்செயல்கள் புரிந்த புனித ரம்ழான் மாதத்தின் இறுதியில் 'ஈதுல் பித்ர்' பெருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அதேவேளையில், மேற்கு ஆசியாவில், மத்திய கிழக்கில் காசா உட்பட பாலஸ்தீனத்திலும், லெபனான் மற்றும் சிரியா போன்ற நாடுகளிலும் நிலவும் யுத்த சூழ்நிலையிலும், கிழக்கு ஆசியாவில் மியான்மரிலும், தாய்லாந்து மற்றும் சீனாவின் சில பகுதிகளிலும் பாரிய நிலநடுக்கத்தின் கோர விளைவுகளுக்கு மத்தியிலும் நாங்கள் சந்தித்திருக்கும் இந்த ஈத் பெருநாளை துக்கத்துடன் அனுஷ்டிக்க நேர்ந்திருக்கின்றது.

இஸ்ரேலின் தொடர்ச்சியான இனப்படுகொலை தாக்குதல்களால் பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீன மக்கள் உயிர்களை இழந்தும், எண்ணற்ற குழந்தைகளும், விதவைகளும் அனாதைகளாகவும் ஊனமுற்றவர்களாகவும் ஆகியிருப்பதையிட்டு இந்த நன்னாளிலும் நாங்கள் வருந்துகின்றோம்.

இரத்தக்களரி ஓய்ந்து , பாலஸ்தீன மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கப் பிரார்த்திப்பதோடு, அவர்களுடனான எங்கள் ஒருமைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

அத்துடன், நமது நாட்டில் நிலவும் நெருக்கடிகள் நீங்கவும், பொருளாதாரம் சிறந்து விளங்கவும், சமூகங்களுககு இடையிலான சகவாழ்வு மேலோங்கவும் பெருநாள் தினத்தில் பிரார்த்திப்போம்.- என்றுள்ளது.

# மலரும் இந்தப் புனித பெருநாள் மண்ணில் அமைதி, நிம்மதியைச் சுமந்து வரவேண்டும்!

## நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் இம்ரான் எம்.பி.



புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் இஸ்லாமிய உறவுகள் அனைவருக்கும் என் மனம் கனிந்த பெருநாள் வாழ்த்துக்கள். மலரும் இந்தப் புனித பெருநாள் இந்த மண்ணில் அமைதியையும் நிம்மதியையும் சுபீட்சத்தையும் சுமந்து வரவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் இம்ரான் எம்.பி. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அல்குர்ஆன் எமது வாழ்க்கை வழிகாட்டி என்ற நிலையை எவருக்காகவும் நாம் விட்டுக்கொடுக்கவும் மாட்டோம். மனிதத்தை வாழ வைக்கும் நீதியை நிலைநாட்டும் சகவாழ்வுக்கான போராட்டமே எம் வழிமுறை. எல்லாவற்றுக்கும் மேலாக இறைதிருப்தியே எமது இலக்காக இருக்கின்றது. இந்த உறுதியோடு இன்று எம்மை அச்சுறுத்தும் அசாதாரண சூழல், மனித உரிமை மீறல்கள், மத துவேஷங்கள், அத்துமீறல்கள் அனைத்தும் நீங்கி நம் நாடு எழுச்சி பெற இப்புனித நாளில் அல்லாஹ்வைப் பிரார்த்திகின்றேன்.

வலிகளோடு கடந்து போகும் காஸா உறவுகளின் வாழ்வில் வெற்றியையும் சந்தோஷத்தையும் ஏற்படுத்தவல்ல ஆரம்பத்தை இப்புனித நாளில் எல்லாம் வல்ல அல்லாஹ் அமைக்க வேண்டும் என்றும் இரு கரமேந்தி பிரார்த்திக்கின்றேன் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

# நெருக்கடிகள் நீங்கி, நிம்மதி ஏற்பட இந்த நன் நாளில் பிரார்த்தியுங்கள்!

## ரிஷாத் பதியுதீன் எம்.பி. வாழ்த்துச் செய்தி



இஸ்ரேலின் எந்த ஈனச்செயல்களும் முஸ்லிம்களின் ஈமானை அழித்துவிடாது. இறுதி வெற்றியும் எமக்கே. சர்வதேச அளவில் முஸ்லிம்கள் பாரிய சவால்களை எதிர்கொள்ளும் நிலையிலேயே, முஸ்லிம்கள் இம்முறை புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாட நேர்ந்துள்ளது. நெருக்கடிகள் நீங்கி, நிம்மதி ஏற்பட இந்த நன் நாளில் பிரார்த்தியுங்கள்.

இவ்வாறு மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் விடுத்துள்ள ரம்ழான் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முஸ்லிம்களுக்கு எதிரான ஸியோனிஸ வாதிகளின் அத்துமீறல்கள் எல்லை மீறியுள்ளன. காஸாவில் ஈவிரக்கமின்றி இனவழிப்புச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் இஸ்ரேலிய அரசு, முழு முஸ்லிம்களையும் ஆத்திரமூட்டியுள்ளது. இவர்களின் கொடூரங்கள் இல்லாதொழிய அல்லாஹ்வைப் பிரார்த்திப்போம்.

ஈமானின் பலத்திலும் பக்குவத்திலும் இந்நேரத்தில் நாம் அணிதிரள்வதே முஸ்லிம் சமூகத்துக்கு பாதுகாப்பாக அமையும். முஸ்லிம்களின் ஈமானை எந்த இராணுவ நடவடிக்கைகளாலும் அழிக்க முடியாது. இதற்கு காஸா மக்கள் சிறந்த அத்தாட்சி. இருப்பைப் பலப்படுத்த இஸ்ரேல் மேற்கொள்ளும் ஈனச்செயல்களும் இழி செயல்களும் இறுதியில் மண்கவ்வவே செய்யும். இறுதி வெற்றி எமக்கே என்ற நம்பிக்கையிலேயே நாங்கள் உள்ளோம்.

அல்லாஹ்வின் திருப்தியை எதிர்பார்த்து நோன்பு நோற்று, நல்லமல்கள் செய்த நாம், ஈமானின் பக்குவத்தை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். நெருக்கடிகள், சோதனைகளின்போது பொறுமை மற்றும் தொழுகையுடன் உதவி தேடுவதே சிறந்தது. ரமழானின் பக்குவங்கள் நமது முன்னேற்றப் பாதைகளுக்கு உறுதியாக அமையட்டும்.

எமது நாட்டு அரசியல் போக்குகளும் ஆரோக்கியமாகத் தென்படவில்லை. அரச உயர்மட்டத்தில், திரைமறைவில் அரங்கேற்றப்படும் முஸ்லிம் விரோத செயல்கள் நிறுத்தப்பட வேண்டும். சமூகங்களை நேசிக்கும் மற்றும் மத நம்பிக்கைகளை கௌரவப்படுத்துகின்ற நிலைப்பாட்டுக்கு இந்த அரசு வரவேண்டும்.– என்றுள்ளது.

# தலைப்பிறை வளர்வது போல மக்களது வாழ்வும் வளரட்டும்!

## பெருநாள் வாழ்த்தில் உதுமாலெப்பை எம்.பி.

ரம்ழான் மாதத்திலுள்ள புனிதம் என்பது மனங்களிலும் வாழ்விலும் பின்பற்றப்படும் போதுதான் இம்மையிலும் மறுமையிலும் ஒளி கிடைக்கும். இதனை முஸ்லிம்களாகிய நாம் மிகக் கவனமாகவும் கரிசனையோடும் செய்து வருகிறோம் என்பதற்கு நானும் நீங்களும் சாட்சி. தலைபிறை வளர்வது போல மக்களது வாழ்வும் வளரட்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை ரம்ழான் பெருநாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது ரம்ழான் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2025 ஆம் ஆண்டின் புனித ரம்ழானும் ஈதுல் ஃபித்ரும் நமது வாழ்வில் மாற்றமானது. அதாவது எப்போதும் உங்களில் ஒருவனான நான் இந்த முறை ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக கைகோர்த்துக் கொள்வது நீங்கள் என்னைக் கொண்டு உருவாக்கிக்கொண்ட புதிய விதியின் மகிழ்ச்சி தருணம் இது.

இவ்வேளையில் நோன்பாலும் தவத்தினாலும் உருவாக்கப்பட்ட நமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் கட்சியின்



போராளிகளையும் அபிமானிகளையும் முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் பெருநாள் வாழ்த்துக்களால் ஆசித்துக் கொள்கிறேன்.

இன்றைய நாட்களில் நமது உறவுகள் பலஸ்தீன மண்ணில் அல்லாஹ் எழுதிய படியான வெற்றிக்கு உரிய நாள்வரை எதிராளிகளின் துரோகத்தனத்தால் வஞ்சிக்கப்பட்டு கொண்டு நோன்பிருந்து புத்தாடைக்கு பதிலாக இரத்த ஆடை அணிந்தபடி வலி கொண்ட பெருநாளை அனுபவித்துக் கொண்டிருப்பதையும் இவ்வேளையில் கனத்த மனதுடன் ஞாபகப்படுத்தி உணர்வுகளால் பங்கு கொள்கிறேன்.– என்றுள்ளது.

# நாம் ரம்ழானில் கற்றவற்றை வாழ்வில் அமுல்படுத்துவோம்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. வாழ்த்துச் செய்தி



நாம் ரம்ழானில் கற்றவற்றை எமது அன்றாட வாழ்வில் அமுல்படுத்துவோம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் நோன்பு பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இறைவனின் கட்டளைக்கமைய இஸ்லாத்தின் கடமைகளில் ஒன்றான நோன்புகள் முழுவதும் நோன்று புனித ரம்ழான் மாதம் முழுவதும் வணக்க வழிபாடுகள் புரிந்து விட்டு இன்று மகிழ்ச்யோடு பெருநாளை கொண்டாடிக்கொண்டிருக்கும் அனைத்து உடன் பிறப்புகளுக்கும் தனது ஈதுல் பித்ர் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என்று அந்த வாழ்த்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

அன்பு, மன்னிப்பு, பொறுமை, மனிதாபிமான செயல்கள் மூலமும் ஆத்ம பரிசோதனை மூலமும் எமது ஆத்மாவையும் உடலையும் தூய்மைப்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை புனித நோன்பு எமக்கு வழங்கியது.

ரம்ழானில் கடமையான தொழுகைகள், குர்ஆன் ஓதுதல், இஃதிகாப் இருத்தல் மற்றும் இதர ஸுன்னத்தான அமல்கள் மூலம் பள்ளிவாசல்கள் நிரம்பிக் காணப்பட்டன. இரவு பகலாக நல்லுபதேசங்கள் கேட்கக் கிடைத்த வண்ணம் இருந்தன. இவ்வாறெல்லாம் நல்ல பல விடயங்களைப் பெற்றுக் கொண்டு நல்லமல்களில் ஈடுபட்ட நாம் அதன் பக்குவத்திலும் பயிற்சியிலும் எமது வாழ்க்கையைத் தொடர்ந்து அமைத்துக் கொள்வதே ரம்ழானில் நாம் அடைந்த பயனாகும்.

அதேபோன்று, எமது நாட்டில் இன நல்லிணக்கம் சமத்துவம் நிலைபெறுவதற்கும் இன, மத வேறுபாடுகளுக்கப்பால் அனைவரும் ஒற்றுமையாகவும் சந்தோசமாக வாழ்வதற்கும் இறைவனிடம் பிராத்திப்போம்.

அதேபோன்று பலஸ்தீனில் நடைபெற்று வரும் மனிதாபிமானமற்ற தாக்குதல்களின் காரணமாக நூற்றுக்கணக்கான அப்பாவி முஸ்லிம்கள் உயிரிழந்துள்ளனர். அதிக மானவர்கள் காயங்களுக்கு ஆளாகியுள்ளர். அங்கு உயிரிழந்தவர்களுக்கு ஜன்னதுல் பிர்தௌஸையும் காயமுற்றவர்களுக்கு பூரண சுகம் கிடைக்கவும் அங்கு சாதகமான சூழ்நிலைகள் உருவாகவும் நமது அன்றாட பிராத்தனைகளில் சேர்த்துக்கொள்வோம்.– என்றுள்ளது.

# தனி மனித வாழ்வை செம்மைப்படுத்தும் ரம்ழான்!

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் வாழ்த்து

தனி மனித வாழ்வை செம்மைப்படுத்தும் ரம்ழான் நோன்பு என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ரம்ழான் நோன்பு திருநாளுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ரம்ழான் நோன்புப் பெருநாள் வாழ்த்துகள் அனைவருக்கும் உரித்தாகும். இஸ்லாமிய மார்க்கக் கடமையில் ஒன்றான நோன்பு, தனிமனித வாழ்வைச் செம்மைப்படுத்துவதோடு, நோன்பு மாதத்தில் ஏழைகளுக்குப் பங்கிட்டு அளிக்கும் கொடைகள் மூலம் சமுதாயத்தில் ஏழ்மை நீங்கி, அனைவரும் வளமோடு வாழ்வதற்கான வழியையும் திறந்துவிடுகிறது என்பதைப் பார்க்கிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் நாடும் ஏடும் நானிலமும் போற்றும் திராவிட மாடல் நல்லாட்சியில் அனைத்து சமுதாய மக்களும் நோன்பை



மதித்துப் போற்றி வருவதைப் பார்க்கும் போது, எல்லாரையும் மனதால் இணைக்கும் இந்தத் திராவிட மாடல் நல்லாட்சி எங்கும் பரவ வேண்டும் என்று பிரார்த்திக்கக் கடமைப் பட்டவர்களாகி விடுகிறோம்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவனும்', 'பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்', 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (உறவினர்) 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்னும் உன்னதக் கொள்கைகளை நிலைநிறுத்தும் ரம்ழான் நோன்புத் திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்துகள். எல்லாமும் எல்லாரும் பெற்று இனிதாக வாழ்ந்திட வாழ்த்துவோம்.– என்றுள்ளது.

# சுதந்திரமும் சுபிட்சமும் மிக்க நாளாக மலர வாழ்த்துகிறேன்

## நோன்புப் பெருநாள் வாழ்த்து செய்தியில் உதுமாங் கண்டு நாபீர்



சுதந்திரமும் சுபிட்சமும் மிக்க நாளாக மலர வாழ்த்துகிறேன் என்று புனித நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபகர், பொறியியலாளர் உதுமாங்கண்டு நாபீர் தெரிவித்தார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அல்லாஹ்வின் கட்டளைப்படி ஒரு மாத கால நோன்பைப் பூர்த்திசெய்து உலகெங்குமுள்ள முஸ்லிம்கள் நோன்புப் பெருநாளாம் (ஈதுல் பித்ர்) ஈகைத் திருநாளை கொண்டாடி மகிழ்கின்ற இந்த வேளையில் முஸ்லிம்களின் ஒற்றுமையைக் குலைத்து எமது சமுதாயத்தைப் பாரிய அழிவுப் பாதையை நோக்கி வழி நடத்த பல சதித் திட்டங்கள் உலகளாவிய ரீதியில் அரங்கேற்றப்படுகின்றன.

இந்த இவ்வேளையில் நாம் நமக்குள் பிளவுகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் செயற்படுவதற்கும், எமது நாட்டில் முஸ்லிம்களாகிய நாம் மதக் கடமைகளைச் செய்வதுக்கும் சுதந்திரமாக எமது பொருளாதார விருத்திக்கும் இப் புனித நோன்புப் பெருநாளில் இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்.

இந்த புனித நாளில் நம்மிடையே சகோதரத்துவம் மேலும் வலுப்பெற்று சமுதாய ஒற்றுமை நீடித்து நிலைக்க வேண்டும்.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் புது நம்பிக்கையுடன் ரம்ழான் பண்டிகையை கொண்டாடுவது மகிழ்ச்சி அளிக்கின்றது.

இந்த நோன்புப் பெருநாள் மனிதன் தன் ஐம்புலன்களையும் அடக்கி, மனதை ஒருநிலைபடுத்தி வாழ்கின்ற பக்குவத்தையும் கோபம், போட்டி, பொறாமை போன்ற தீய எண்ணங்கள் மனதில் இருந்து விலக்கி சகோதரத்துவத்துடனும், ஒற்றுமையுடனும், ஒருமைப்பாட்டுடனும் சக மனிதர்களோடு, சமூகத்தினரோடும் நன்னெறிகளை பகிர்ந்து வாழ்வதற்கு முயற்சிப்போம்.

எமது பலஸ்தீன் மக்கள் படுகின்ற அவலங்கள் நீங்கி, உலகளாவிய ரீதியில் முஸ்லிம்கள் ஒற்றுமையுடன் வாழ்வதற்கும் பலஸ்தீன் மக்களின் சுதந்திரத்துக்காகவும் இந்த நன்நாளில் இரு கையேந்தி பிரார்த்திப்போம்.– என்றுள்ளது.

# நாம் ஆக்கபூர்வமான முயற்சிகளை தூய சிந்தனையுடன் முன்னெடுப்போம்!

## ஐக்கிய மக்கள் காங்கிரஸின் செயலாளர் யஹ்யாகான்

நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் அரசின் எல்லா திட்டங்களையும் எதிர்த்துக் கொண்டிராது, அரசின் ஆக்கபூர்வமான திட்டங்களுக்கு ஆதரவு வழங்கவும் முஸ்லிம் சமூகம் தனது பாதுகாப்பையும் உரிமைகளையும் உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்கும் தூய சிந்தனையுடன் ஆக்கபூர்வமான முயற்சிகளை முன்னெடுக்க இன்றைய ஈகைத்திருநாளில் திடசங்கற்பம் பூணுவோம்.

ஐக்கிய மக்கள் காங்கிரஸ் செயலாளர் நாயகம் அல்ஹாஜ் ஏ.சி. யஹ்யாகான் விடுத்துள்ள பெருநாள் வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இன்றைய அரசியல்வாதிகளில் சிலர் நாங்கள் எதிர்க்கட்சிகளில் இருக்கின்றோம் என்பதற்காக அரசு முன்வைக்கும் அனைத்துத் திட்டங்களையும் எதிர்த்துக்கொண்டு இருக்கின்றனர். இவ்வாறான நிலை மாற வேண்டும். அத்துடன் "முஸ்லிம் சமூகத்தின் மீதான பேரினவாத கெடுபிடிகள் இன்னும் முற்றுப் பெறாமல் அங்கும் இங்குமாக தலைவிரித்தாடுகின்ற சூழ்நிலையில் சுயநலமற்ற, தூரநோக்கு சிந்தனையுடைய மாற்று அரசியல் சக்தியின் தேவை உணரப்படுவதனால் அத்தகைய சக்தியொன்றை பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து எல்லோரும் சிந்திக்க வேண்டியுள்ளது.

தமது சுகபோகங்களுக்காக சமூகத்தை ஏமாற்றி வருகின்ற சக்திகளிடமிருந்து முஸ்லிம்கள் தம்மை விடுவித்துக் கொள்ளாத



வரையில் முஸ்லிம் சமூகம் ஒருபோதும் தனது அபிலாஷைகளை அடைந்து கொள்ள முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

பள்ளிவாசல்கள் மற்றும் சமய, கலாசார உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும், கல்வி, பொருளாதார துறைகளுக்கு விடுக்கப்படுகின்ற அச்சுறுத்தல்கள் உடைத்தெறியப்பட வேண்டும், என்பதுடன் பொதுவாக இந்நாட்டு முஸ்லிம்கள் தமது தாய் மண்ணில் அனைத்து உரிமைகளுடனும் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் தலைநிமிர்ந்து வாழ்வதற்கான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும்.

ரம்ழான் மாதம் நமக்குக் கற்றுத் தந்த படிப்பினைகள், சமூகம் வேண்டி நிற்கும் இத்தகைய சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்க உறுதுணையாக அமைய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கிறேன்.– என்றுள்ளது.

# தமிழ் அமைப்புக்களின் மீதான தடையும் பொருளாதார மீட்சிக்கான வெற்றிடமும்!

## மீள் பரிசீலிக்குமா இலங்கை அரசாங்கம்?



ஹரிகரன் ரவீந்திரநாதன்

மழை நின்றும் தூவானம் நின்று விடவில்லை. அது போலதான் யுத்தம் முடிவடைந்து 16 வருடங்கள் நெருங்கும் நிலையில் கூட தமிழ் மக்கள் மீதான தடைகளும், அமைப்புக்கள் மீதான தடைகளும் பயங்கரவாதம் என்ற பெயரில் தொடர்கின்றன. புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை குறித்த விடயம் இன்று பேசுபொருளாக உள்ளது. இந்த அறி விப்பு மூலம் தடையிடப்பட்ட புலம் பெயர் அமைப்பு களின் பெயர்களை இலங்கை அரசாங்கம் வெளி யிட்டுள்ளது. அத்தோடு அந்த அமைப்பின் செயற்பாட் டாளர்களையும் பெயர் பட்டியிலிட்டு இலங்கை



நாட்டிற்கு வரமுடியாதவாறு தடையினைப் பிறப்பித் துள்ளார்கள். இதன் மூலம் அரசாங்கம் சாதிக்க முயல்வது என்ன? தடை செய்யப்பட்ட அமைப்புக் கள் உண்மையில் பயங்கரவாத அமைப்புக்களா? இன்னும் பயங்கரவாதம் இருக்கின்றதா? என்ற பல கேள்விகள் மக்கள் மனங்களில் எழாமல் இல்லை.

இலங்கை தீவு ஆட்சியாளர்களின் திட்டமிடாத அரசியல், பொருளாதாரக் கொள்கைகளாலும், 30 வருட யுத்தத்தாலும் பொருளாதார ஸ்திர தன்மையை இழந்து, பொருளாதார மீட்சிக்காக போராடிக் கொண் டிருக்கின்றது. இந்த நிலையில் புலம்பெயர் முதலீட் டாளர்களையும், புலம்பெயர் அமைப்புக்கள், வெளி நாட்டு பல்தேசிய கம்பனிகள் என்பவற்றின் உதவி களைப் பெற்று நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய தேவை உள்ளது. ஆனால் கடந்த கால அரசாங் கங்களைப போல இந்த அரசாங்கமும் புலம் பெயர் அமைப்புக்களையும், நபர்களையும் தடை செய்து நாட்டிக்கு வரும் முதலீடுகளைக் குறைக்கும் செயற்பாட் டையே மேற்கொள்கின்றது.

தமிழ் தேசிய இனம் மீண்டும் ஓர் ஆயுதப் போராட்டத்திற்கு தயாரில்லை. அகிம்சை ரீதியில் தனக் கான உரிமைக்காக ஜனநாயக இடைவெளிகளைப் பயன்படுத்தியே போராடி வருகின்றது. அதற்கு பக்க பலமாக புலம் பெயர் அமைபபுக்களும், புலம் பெயர் தமிழ் மக்களும் செயற்படுகிறார்களே தவிர, மாறாக புலி உருவாக்கம் இடம் பெறவில்லை. அதற்கான வாய்ப்புக்களும் 16 வருடங்களுக்கு பின் இருக்குமா என்பதை சிந்திக்க வேண்டும். வடக்கு - கிழக்கில் தேசிய மக்கள் சக்தி கூட பெருவாரியான வாக்குகளைப் பெற்றுள்ளமையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

யுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த பல ஆயிரக்கணக்கான போராளிகள் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வின் பின் சமூகமயப்படுத் தப்பட்டு வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தமது வாழ்வாதாரத்திற்காக போராடி வருகிறார்கள். புலம் பெயர் மக்களும் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு தம்மால் முடிந்த உதவிகளை செய்து வருகி-றார்கள். இது இலங்கையில் பெ-ாருளாதாரத்திற்கு ஒரு பலமாக வும் இருக்கின்றது. ஆனால் பயங்-கரவாதம் என்ற ஒரு கண்ணா-டியைப் போட்டுக் கொண்டு காலத் திற்கு காலம் கடந்த அரசாங்கங்கள் செய்த அதே தவறை தற்போதைய அரசாங்கமும் செய்கின்றதா என்ற கேள்வி எழுகிறது.

இலங்கையில் மாறி மாறி ஆட்சிபீடம் ஏறுகின்ற அரசாங்கங்கள் காலத்துக்குக் காலம் தமிழர் விவ காரத்துடன் தொடர்புடைய விடயங்களில் தமது நலன் களுக்காக இவ்வாறான முடிவுகளை அறிவிப்பதும், அந்த முடிவுகளை நடைமுறைப்படுத்தாது விடுவ தும் மீண்டும் புதிது புதிதாக முடிவுகளை அறிவிப் பதும் வழமையான ஒன்று. இலங்கை அரசாங்க ளின் இவ்வாறான நகர்வுகளின் ஒரு நீட்சியே புலம் பெயர் தமிழர்கள் மீதான தற்போதைய தடை ஆகும்.

2009 மே மாதம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவடைந்த பின்னர் இந்த அமைப்புகளில் பல மாறி மாறி பயங்கரவாத அமைப்புகளாக அறிவிக்கப் பட்டு மீண்டும் பலமுறை பட்டியலில் இருந்து நீக்கப் பட்டன. யுத்தம் முடிவடைந்து ஐந்து வருடங்களின் பின்னர் 2014ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 424 நபர்களையும் 16 அமைப்புகளையும் தடை செய்தது.

நல்லாட்சி அரசாங்கம் எட்டு அமைப்புகள் மற்றும் அவற்றில் அங்கம் வகித்த 267 தனிநபர்கள் மீதான தடையை நீக்கியது. பின்னர் மீண்டும் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் ஏழு அமைப்புகளையும் 389 நபர்களையும் தடைப் பட்டியலில் சேர்த்தது. பின் னர் 6 அமைப்புகளும் 316 நபர்களும் மீண்டும் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர்.

மாறிமாறி ஆட்சிபீடம் ஏறும் கட்சிகள் தேசிய பாது காப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறியே புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் மீதான தடை

தொடர்ச்சி▼



# தமிழ் அமைப்புக்களின் மீதான தடையும் பொருளாதார மீட்சிக்கான வெற்றிடமும்!

தொடர்ச்சி▲

களை விதிப்பதும் பின்னர் சில அமைப்புகள் மீதான தடைகளை நீக்குவதும் மீண்டும் தடை விதிப்பதுமாக நாடகமாடிக் கொண்டிருக்கின்றனர்.

இதுபற்றி டெய்லிமிரர் (16.08.2022) தனது ஆசிரியர் தலையங்கத்தில் பின்வரும் கேள்விகளை முன்வைத்திருந்தது.

தேசிய பாதுகாப்பிற்கு விரோதமான அமைப்புக்கள் என தடைசெய்யப்பட்ட இரண்டு தடவையும் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ராஜபக்ஷ வால் முடிவெடுக்கப்பட்டது. அதே நேரத்தில் தடையை நீக்கும் முடிவுகளை ரணில் விக்கிரமசிங்க முதல் முறையாக பிரதமராகவும் இப்போது ஜனாதிபதியாக வும் இருக்கும் போது எடுக்கப்பட்டுள்ளது. எனவே இவை உளவுத்துறை மதிப்பீடுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகள் அல்ல. அரசியல் முடிவுகள் என்று எவரும் முடிவு செய்வது இயல்பானதே.

எவ்வாறாயினும் ஒவ்வொரு முறையும் அரசாங் கத்தின் முடிவுகள் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி களின் இத்தகைய மதிப்பீடுகள் மற்றும் பரிந்துரை களுக்கு காரணமாகும் என்றும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ராஜபக்ஷர்களின் ஆதிக் கம் செலுத்தும் அரசாங்கத்தின் தலைவர்கள் காது கேளாத மௌனத்தையும் மீறி சமீபத்திய முடிவுக்கு உடன்படுகிறார்களா என்பது தெளிவாகத் தெரிய வில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன், 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங் கம் எட்டு அமைப்புக்கள் மற்றும் 267 நபர்களை பட்டியலிலிருந்து நீக்கிய போது அவர்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்கள் என்பதையும் டெய்லி மிரர் ஆசிரியர் தலையங்கம் அப்போது சுட்டிக் காட்டியிருந்தது.

உண்மையில் "தேசிய பாதுகாப்பு" என்ற போர் வையில் அரசியல் தலைமைகள் மேற்கொள்ளும் தீர்மானங்களே இவை. இந்தத் தீர்மானங்களுக் கும் தேசிய பாதுகாப்புக்கும் சம்பந்தம் இருப்பதாக தெரியவில்லை. கடந்த கால தடைகள், தடை நீக் கம் என்பன மாத்திரமல்ல தற்போதைய தடையும் இதனையே உணர்த்தி நிற்கின்றன.

தற்போதைய ஜனாதிபதி அனுர அரசாங்கம் வெளியிட்டுள்ள விசேட வர்த்தமானி அறிவிப்பில், தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட 15 அமைப்புகள் மீதான தடை தொடரும் என அறிவித்துள்ளது. பாது காப்பு செயலாளர் கையொப்பமிட்டுள்ள இந்த வர்த்த மானியில், இந்த அமைப்புகள் தொடர்ச்சியாக பயங் கரவாதத்திற்கு நிதி உதவி வழங்கின எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக, அவற்றின் நிதி மற்றும் பொருளாதார சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 222 தனி நபர்களுக்கும் தடை விதித் துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழர் மறுவாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, உலகத் தமிழ் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், உலகத் தமிழர் நிவாரண நிதி, தலை மையகக் குழு, கனடியத் தமிழர் தேசிய மன்றம், தமிழ் இளைஞர் அமைப்பு என்பவையே இந்த அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட தமிழ் அமைப் புக்களாகும்.

இதில் உண்மையில் பயங்கரவாததுடன் தொடர்புடையவர்கள் உள்ளார்களா? இந்த அமைப் புக்கள் தொடர்ந்தும் பயங்கரவாதத்துடன் தொடர்புடை யனவாக இயங்குகின்றனவா என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டும். உண்மை வெளிப் படுத்தப்பட்டு தடைகளைப் பரிசீலனை செய்ய வேண்டும். இந்த அமைப்புக்களுடன் தொடர்புடை யவர்களாகக் கூறப்படும் 222 தனிநபர் என்பது சாதாரண விடயமல்ல. எமது நாட்டுக்கு வரக்கூடிய வெளிநாட்டு முதலீட்டை அது குறைக்கும். எனவே இதனைப் பாதுகாபபு அமைச்சும், அரசாங்கமும் அரசில் நோக்கிற்காக கையாளாது உண்மையான பயங்கரவாதத்தை கண்டறிந்து எமது நாட்டின் பொருளாதார மீட்சிக்கு வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்க வேணடும். அதன் மூலமே நாட்டை பொருளாதார ரீதியாக மீள கட்டியெழுப்ப முடியும்.

■





# வாரியபொலவில் சொகுசு பஸ் விபத்து

(உடப்பு க.மகாதேவன்)

குருநாகல் - புத்தளம் வீதியில் வாரியபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் குளிரூட்டப்பட்ட பஸ் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த சம்பவம் நேற்று மாலை 7.10 மணியளவில் இடம்பெற்றதாக வாரியபொல பொலிஸார் தெரிவித்த னர். விபத்தில் உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை. பஸ்ஸின் முன் பக்கப் பகுதி சேதமடைந்துள்ளது. சாரதியின் நித்திரையின்

காரணமாக இந்த விபத்து ஏற்பட்டு இருக்கலாம் என விசாரணையில் தெரியவருகின்றது. மேலதிக விசாரணை களை வாரியபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# இந்திய பிரதமரின் இலங்கை விஜயம் எமக்குக் கிடைத்த ராஜதந்திர வெற்றி

## பிற நாட்டு தலைவர்களும் வரவுள்ளனர் என்கிறார் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர

(கனகராசா சரவணன்)

மிகக்குறுகிய காலத்தில் இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் அனுசரணையைப் பெற்றுக் கொண்டு இராஜதந்திர ரீதியாக மிகவும் ஒரு சக்தி வாய்ந்த நாடாக உருவெடுத்து வந்துள்ளோம். இந்த வெற்றியின் முதற்படியாக எமது நாட்டிற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விஜயம் மேற்கொள்ளவுள்ளமையை முக்கியமான விடயமாகப் பார்க்கின்றோம். அவரின் வருகையின் பின்னர் ஏனைய நாட்டு தலைவர்களும் வர இருக்கின்றனர் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பழைய கச்சேரி மண்டபத்தில் பிரதி அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டம் வெற்றிகரமாக இடம்பெற்றது. எது, எவ்வாறாக இருந்தாலும் தேர்தல் விதிமுறை அமுலில் இருப்பதால் சில அபிவிருத்தி தொடர்பான விடயங்களை பற்றி தீர்மானம் எடுத்தோம். அதேவேளை எதிர்வரும் நாளகளில் ஜனாதிபதி மட்டக்களப்பில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொள்வார். கடந்த நாடாளுமன்ற தேர்தலைவிட உள்ளூராட்சி சபையில் மட்டக்களப்பில் பாரிய வெற்றி பெறுவோம்.

கனியவளத்தை (மண் அகழ்வு) பார்த்தால் கடந்த காலத்தில் அரசியல் ரீதியான தாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே நான் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவராக வந்தவுடன் சில இடங்களில் சட்டவிரோத அகழ்வுகளை நிறுத்தினேன். இருந்த போதும் மண் கொள்கை என்ற அடிப்படையில் இந்த மண் அகழ்வை சரியான முறையில் செய்யவேண்டும் என்ற நோக்கத்தை கொண்டுள்ளோம்.

இருந்த போதும் சில இடங்களில் முறைகேடுகள் இடம்பெறுகின்றன என முறைப்பாடுகள் வந்துள்ளன.

கடந்த 76 வருடங்கள் ஒரு சீர்குலைவுக்கு உட்படுத்தப்பட்ட நாட்டைத்தான் நாங்கள் பெறுப்பெடுத்துள்ளோம்.

இருந்தபோதும் சட்டவிரோத மண் அகழ்வுக்கு எதிராக குரல்கொடுக்க கடமைப்பட்டுள்ளோம். இதில் மகாவலி, நீர்ப்பாசனம், விவசாயம், வனபரிபாலனம், கனியவளம், சுற்றுச்சூழல் போன்ற திணைக்களங்களை ஒன்றுபடுத்தி, ஒரு வெளிப்படை தன்மையிலான மண் கொள்கை ஒன்றை வகுத்து, பொருத்தமான இடங்களை அடையாளம் கண்டு, அவற்றில் சரியானவர்களுக்கு அக்ச்ழ்வதற்கு அனுமதி வழங்க துறைசார்ந்தவர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொளளப்படும்.

இந்தியா இராஜதந்திர ரீதியாக மிக நெருக்கமான நாடு. மிகவும் அண்மையில் இருக்கின்ற நாடு. தேசிய மக்கள் சக்தி தொடர்பாகவும் ஜனாதிபதி தொடர்பாகவும் எதிர்த் தரப்பினரால் முன்வைக்கப்பட்ட பிரபலமான விமர்சனம்தான் சர்வதேச ரீதியாக எந்த விதமான கொடுக்கல் – வாங்கல்களைச் செய்ய முடியாது. இந்தியா பகைக்கும். அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் உதவிகள் கிடைக்கா – என அடிப்படை இல்லாத விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

ஆனால் இன்று மிகக்குறுகிய காலத்தில் இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் அனுசரணையை பெற்றுக் கொண்டு, இராஜதந்திர ரீதியாக மிகவும் ஒரு சக்திவாய்ந்த நாடாக உருவெடுத்து வந்துள்ளோம். இந்த வெற்றியின் பின்னர் எமது நாட்டிற்கு முதலில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விஜயம் மேற்கொள்ளவுள்ளமையை முக்கியமான விடயமாகப் பார்க்கின்றோம்

அதேவேளை இந்தியாவுடன் சூரிய சக்தி மின்சாரம் தொடர்பாகக் கூட்டு ஒப்பந்தம் செய்யவுள்ளோம். அதுமட்டுமல்ல, இந்திய அரசின் பாரிய உதவி மூலம் கிழக்கு மாகாணத்தில் பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன. – என்றார்.

# சட்டவிரோதமாகப் பனை மரம் தறிப்புக்கு தண்டனையை அதிகரிக்க நடவடிக்கை!

## பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் தகவல்

**(த.சுபேசன்)**

வடக்கு மாகாணத்தில் சட்டவிரோதமாக பனை வளம் அழிக்கும் செயற்பாடு அதிகமாக இடம்பெற குற்றத்திற்கான தண்டப்பணம் மற்றும் தண்டனை ஆகியன குறைந்த அளவில் இருப்பதே பிரதான காரணமாகக் காணப்படுகின்றது என பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பளை-இயக்கச்சிப் பகுதியில் அதிகளவான பனை மரங்கள் தறித்து அழிக்கப்பட்ட நிலையிலேயே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

சட்டவிரோதமாக பனை மரங்களை அழிக்கும் குற்றச்செயல்களுக்கான தண்டனை மற்றும் தண்டப் பணத்தை



அதிகரிக்க பனை அபிவிருத்திச்சபையினுடைய பணிப்பாளர்சபைக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டு பனை வளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம்.

பனை வளத்தை தறிப்பதனை தடுப்பது மாத்திரம் எமது இலக்கு அல்ல, பனை வளத்தைப் பேணுபவர்களுக்கு அதன் மூலமாக வருமானத்தைப் பெருக்க நடவடிக்கை எடுப்பதும் எமது நோக்காகக் காணப்படுகின்றது.

பனை வளத்தை மக்கள் தாமாக விரும்பிப் பாதுகாக்கும் சூழல் ஏற்படுவதே உண்மையான பனை வள அபிவிருத்தியாக அமையும்.

வெறுமனே சட்டங்களாலும், அதிகார பிரயோகங்களாலும் பனை வளத்தைப் பாதுகாக்க முடியாது என்பதனை பனை அபிவிருத்திச்சபை உணர்ந்துள்ளது.

பனை வளத்தைப் பனை அபிவிருத்திச்சபையால் மாத்திரம் பாதுகாக்க முடியாது. மக்களுடைய ஒத்துழைப்பும் கிடைத்தால்தான் அது சாத்தியமாகும். – என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.



# ரூ.11 மில்லியன் மதிப்புள்ள பீடி இலைகளுடன் மன்னார் முருங்கன் பகுதியில் ஒருவர் கைது!

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் இருந்து கொழும்பிற்கு சட்டவிரோதமான முறையில் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி பீடி இலை மூடைகளுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு முருங்கன் பகுதியில் வைத்து முருங்கன் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து சட்ட விரோதமான முறையில் கொண்டு வரப்பட்டு பின்னர் கொழும்பு கொண்டு செல்லப்பட்ட போது முருங்கன் பகுதியில் வைத்து இந்த பீடி இலை மூடைகள் மீட்கப்பட்டன. சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

மன்னார் இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் முருங்கன் பகுதியில் வைத்து இந்த வாகனம் சோதனையிடப்பட்டது.

இதன் போது 40 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 11 மில்லியன் ரூபா மதிப்புள்ள 1200 கிலோ கிராம் பீடி இலை மூடைகள் மீட்கப்பட்டன. களனியைச் சேர்ந்த 23 வயதுடைய வாகனத்தின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு முருங்கன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

முருங்கன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டில் ஜனநாயகம் வீழ்ச்சி கண்டு வருகிறது அரசை விமர்சிப்போர் சிறை செல்லும் அவலம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசனம்









நாடு முகம் கொடுத்து வரும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் தீர்வுகளையும் பதில்களையும் வழங்க முடியாத, வினைத்திறன் அற்ற அரச நிர்வாகமே இருப்பதாக 220 லட்சம் மக்களுக்கும் நாளுக்கு நாள் நன்கு புலப்பட்டு வருகிறது. ஜனாதிபதியும் அமைச்சர்கள் தலைமையிலான ஆளுந்தரப்பு உறுப்பினர்களின் கூற்றுப் படி, யார் அதிகம் குரல் எழுப்புகின்றனரோ, அவர்கள் சிறைக்கு செல்ல நேரிடும். அப்படித்தான் அவர்கள் தெரிவித்து வருகின்றனர். சிறைக்கு செல்லும் பட்டியலை தயாரித்து வருகிறோம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். கூச்சல் போடுமளவுக்கு சிறைக்கு செல்ல நேரிடும் என்றும், நாடாளுமன்றக் கூட்டத்தையும் சிறையில் நடத்த வேண்டி வரும் என்றும் கருத்து தெரிவிக்கின்றனர். இதன் மூலம் நாட்டில் ஜனநாயகத்திற்கும், ஜனநாயக உரிமைகளுக்கும் இடமில்லை என்றே தோன்றுகிறது. மக்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பல்வேறு கருத்துக்களையும் வாதங்களையும் முன்வைப்பதற்கு சுதந்திரம் இல்லை. எமது நாடு ஜனநாயக நாடு என்பதை இந்த அரசாங்கம் மறந்து விட்டு செயல்பட்டு வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

விமர்சனம் செய்வதும், தவறுகளை திருத்துவதும், தவறுகளை சுட்டிக்காட்டுவதும், உண்மைகளை சுட்டிக் காட்டுவதும், தரவுகளை முன்வைப்பதும் சிறைக்குச் செல்ல ஒரு காரணமாக அமையும் என்பதனை சொல்லாமல் சொல்லுகின்றனர். இவை ஜனநாயக உரிமைகளாகும். இவற்றைக் கூறி ஆளுந்தரப்பு அமைச்சர்கள் அச்சுறுத்தி வருகின்றனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

குண்டசாலை தேர்தல் தொகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

பேச்சு சுதந்திரத்திற்கும் இன்று வரையறை விதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் சில பாரதூரமான பேச்சுக்கள் ஜனநாயகத்தின் அழிவைச் சுட்டி நிற்கின்றன. அடிப்படை மனித உரிமைகள் மற்றும் பேச்சு சுதந்திரத்தையும் மீறுவதையும் இது எடுத்துக் காட்டுகின்றது. ஆளுந்தரப்பு உறுப்பினர்களின் அபிப்பிராயத்திற்கு ஏற்ப சிரேஷ்ட பிரஜைகளுக்கு வழங்கப்படும் 15 வீத வட்டிச் சலுகை, வேலையில்லாப் பட்டதாரிகளுக்காக குரல் எழுப்புவது, அதிபர்- ஆசிரியர் சம்பளம் முரண்பாடு குறித்து பேசுவது, சூரிய சக்தி உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்துப் பேசுவது, டீசல் மாபியாவை விமர்சிப்பதும் எதிர்ப்பதும், பொது பாதுகாப்பு குறித்து பேசுவதும், நாட்டில் மேலெழுந்து வரும் கொலைக் கலாசாரம் குறித்து பேசுவது எல்லாம் சிறைக்குச் செல்ல காரணங்கழ்லச்க இருந்து வருகின்றன. இதற்கு நாம் இடமளியோம். கருத்துச் சுதந்திரத்திற்கும் பேச்சுச் சுதந்திரத்திற்கும் எவ்வகையிலும் யாராலும் அச்சுறுத்தல் விடுக்க முடியாது. இது ஜனநாயகம் அல்ல. இவ்வாறு எமது வாயை மூட முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியும், பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் ஆணையும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவே அன்றி சர்வாதிகாரத்தை முன்னெடுக்கும் நோக்கில் வழங்கப்படவில்லை. மக்கள் பிரச்சினைகளை எதிர்க்கட்சி தொடர்ந்து பேசும். வறுமையை ஒழிக்கும் நடவடிக்கையில் காணப்பட்டு வரும் அரச மெத்தனப் போக்கு தொடர்பில் தொடர்ந்தும் குரல் எழுப்புவோம். சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையில் திருத்தங்களை கொண்டு வருவோம் என கூறிக் கொண்டு, முன்னாள் ஜனாதிபதியின் உடன்படிக்கையை பின்பற்றி, முன்னாள் ஜனாதிபதியின் தொங்கு பாலத்தால் கடந்து வருவது குறித்து நாம் தொடர்ந்து விமர்சிப்போம். நாட்டின் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில், ஐக்கிய மக்கள் சக்தி பொது மக்களின் பேசும் உரிமைக்காக தொடர்ந்தும் குரல் எழுப்பும். - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் சுட்டிக்காட்டினார்.

சிறையிலடைப்போம் என கூறி நாட்டுக்கு நகைச்சுவைகளை வழங்க வேண்டாம். பிரச்சினைகளுக்கு தீர்வுகளையும பதில்களையும் வழங்கவே மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். ஆகவே, நாட்டுக்கு அவ்வப்போது நகைச்சுவைகளை பரிசளிப்பதை விடுத்து செய்து காட்டுங்கள். எனவே நகைச்சுவையான கருத்துக்களை விடாமல் வேலை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


உலகில் வறுமையை ஒழிக்கவும், பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், நுண்கடன்கள் என்ற எண்ணக்கருவும் வேலைத்திட்டங்களும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. பங்களாதேஷில் உள்ள கிராமிய வங்கியின் மூலம்

தொடர்ச்சி▼

# நாட்டில் ஜனநாயகம் வீழ்ச்சி கண்டு வருகிறது அரசை விமர்சிப்போர் சிறை செல்லும் அவலம்









தொடர்ச்சி▲

இவ்வெண்ணக்கரு முன் கொண்டு வரப்பட்டது. எமது நாட்டிலும் ஜன சவிய மற்றும் சமூர்த்தி மூலம் இது நடைமுறைப்படுத்தப்பட்டாலும் இன்று, நுண்நிதி கடன் வசதி திட்டங்கள் பல்வேறு வகையான வணிகங்களாக மாறியுள்ளன. வீட்டுப் பெண்களைப் தொடர்பு படுத்தி இந்த கடனை கொடுத்து, அப்பெண்களை கடன் மரண வலையில் சிக்க வைத்துள்ளனர். இது பரவலாக நடந்துள்ளது. நாட்டின் பல பகுதிகளிலும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனால் பலர் பலவிதமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பெண்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இதன்மூலம், கடன் அடிமைகழ்ல் உருவாக்கப்பட்டுள்ளனர். இதனை தொழிலாக நடத்திவரும் கும்பலை கட்டுப்படுத்த வேண்டும். நுண்கடன் வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளை ஒழுங்குமுறைக்குட்படுத்த வேண்டும். இந்த கடன் மரண வலைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி போராடும். இதனை ஒழுங்குமுறைக்கு கீழ் கொண்டு வர ஐக்கிய மக்கள் சக்தி தயார்.– என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.







# நீலகண்டன் நினைவுப் பகிர்வுக் கூட்டம்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் கந்தையா நீலகண்டன் அமரத்துவம் அடைந்து ஏழாவது வருடாந்த பூர்த்தியை முன்னிட்டு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற நினைவுப்பகிர்வு கூட்டத்தில் அவரது பாரியார் சட்டத்தரணி திருமதி சசிதேவி நீலகண்டன் திருவுருவப்படத்திற்கு ஒளி தீபம் ஏற்றுகின்றமையையும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் திருமதி அபிராமி கைலாசபிள்ளை தலைமையுரை ஆற்றுகின்றமையையும், ஜனாதிபதி சட்டத்தரணி வி.புவிதரன் நினைவுப்பேருரை நிகழ்த்துகின்றமையையும், கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.



# பிரிட்டன் நால்வருக்குத் தடை விதித்த நிலைப்பாடு சர்வதேச நீதிமன்றம் வரையில் முன்னேற வேண்டும்

## அதன் ஊடாக நீதி கிடைக்க வேண்டும் என்கிறார் செல்வம் எம்.பி.

(கி.வசந்தன்)

நான்கு பேர் தடை தொடர்பில் பிரித் தானியாவின் நிலைப்பாடு சர்வதேச நீதிமன்றம் வரை செல்ல வேண்டும். அதன் ஊடாக நீதி கிடைக்க வேண்டும் என ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி யின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார்.

வவுனியா, வைரவபுளியங் குளம் பகுதியில் அமைந்துள்ள அவ ரது அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

மனிதவுரிமை மீறலில் ஈடுபட்டதாக நான்கு பேருக்கு பிரித்தானியா தடை விதித்துள்ளது. இதனை நாம் முதலில் வரவேற்கின்றோம். ஆனால் விநோதம் நடைபெறுகிறது. தென்னிலங்கையில் தற்போது உள்ள அரசு சார்ந்தவர்கள் உட்பட எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றாக நின்று இவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்கிறார்க்ள்.

ஜே.வி.பி. அரசாங்கம் ஆரம்பத்தில் எமது இனப் பிரச்சினை தொடர்பில் ஐ.நா. தீர்மானம் எடுக்கப்பட்ட உட னேயே அதை நடைமுறைப்படுத்து வதற்கான ஆதரவை கொடுக்க வில்லை. இப்பொழுது நான்கு பேருக்கு தடை விதித்ததை வைத்துக் கொண்டு அமைச்சர் அனைவரும் கூக்குரல் போடுவது இனவாதத்தின் அடிப்படை யில் இந்த அரசாங்கம் செயற்படு வதை தொட்டத் தெளிவாகக் காட்டுக் கின்றது.

ஆகவே, எங்களைப் பொறுத்த வரை எப்படி சிங்கள தேசத்தில் ஒருவ ருக்கு பிரச்சினை என்றால் ஆட்சியா ளர்கள், கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டு அதற்கு எதிராக குரல் கொடுக்கின்ற விடயத்தை நாம் வர லாற்று ரீதியாகப் பார்க்கின்றோம். தற்போதும் பார்க்கின்றோம். ஆனால் எங்களுக்குள் ஒற்றுமையீனத்தை பார்த் துக் கொண்டிருக்கின்றோம்.




எங்களது போரராட்டங்களும் ஒரு மித்த போராட்டமாக நடைபெறுவ தில்லை. ஆகவே தொடர்ந்தும், மனித வுரிமை மீறல்கள் செய்தவர்களுக்கு ஐ.நா. சபை கூட அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் என்று கூறுகின்ற நிலையில், தமிழ் மக்கள் அனைவரும் இதனை ஆதரிக்க வேண்டும்.

மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்ட வர்களுக்கு சர்வ தேச நீதிமன்றத்தின் மூலம் நீதி வருவதற்கு நாம் அதனை செயற்படுத்த வேண்டும். நாங்கள் ஒற்று மையாக இல்லை என்றால் தென்னிலங் கையில் உள்ளவர்கள் ஒற்றுமையாக இருந்து எம்மை அழிக்கின்ற செயற் பாட்டை முன்னெடுப்பார்கள். புதிய அர சாங்கம் கூட போராட்ட இயக்கம் என் கின்ற நிலை மாறி ஓர் இனவாத அரசாகவே பார்க்கக் கூடிய நிலை யில் உள்ளது. பிரித்தானியாவின் நிலைப் பாடு சர்வதேச நீதிமன்றம் வரை செல்ல வேண்டும். அதன் மூலம் நீதி கிடைக்க வேண்டும்.

எங்களுக்குள் இருக்கும் பகைமை களை மறந்து எங்களுக்காக மரித்த மக்கள், போராளிகள் அனைவருக்கு மாகவும், தொடர்ந்தும் தமிழர் பகுதி களில் இடம்பெறும் புத்தமயமாக்கல், நில அபகரிப்பு, தொடரும் அரச அடக்கு முறைகளுக்கு எதிராக ஓரணியில் செயற்பட வேண்டும்.

புதிதாக வந்த அரசாங்கம் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோருகினற போது அரசியல் கைதி களே இல்லை எனக் கூறினார்கள். தற்போது அரசியல் கைதிகள் விடுதலை சம்மந்தமாக நாள்கள் செல்லும் எனக் கூறியுள்ளது. ஆகவே, அரசியல் கைதி கள் இருக்கிறார்கள் என்பதை இந்த அரசு ஒத்துக் கொண்டுள்ளது. தேர் தல் நெருங்கும் நிலையில் அரசியல் கைதிகள் தொடர்பில் பேசுவதை கவ னத்தில் கொள்ள வேண்டும். தேர்தல் காலங்களில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. என்ன வேலைத்திட்டங்களை செய்யப் போகின்றோம் எனக் கூறகிறார்கள்.

நாடாளுமன்றத்தில் கூடுதலான ஆசனங்களை பெற எவ்வாறு செயற் பாட்டார்களோ அதேபோல் வடக்கு, கிழக்கில் பல சபைகளை கைப்பற்றும் நோக்கோடு செயற்படுகிறார்கள் என தெரிகிறது. – என்றார்.

# “பன்னாட்டு உதவிகளும் உள்நாட்டுச் சவால்களும்” தமிழ்ச் சங்கத்தில் உரை

கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் அறி வோர் ஒன்றுகூடல் நிகழ்வில் வரும் புதன்கிழமை (2 ஆம் திகதி) மாலை 5.30 மணிக்கு கொழும்பு பல் கலைக்கழக அரசியல்துறை போதனா சிரியர் சரண்யா திருக்குமரன் “பன் னாட்டு உதவிகளும் உள்நாட்டுச் சவால் களும்“ என்ற தொனிப்பொருளில் உரை யாற்றுகிறார். ஊடகவியலாளர் நா. தனுஜா தலைமையில் நிகழ்வு சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் நடைபெறும்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.03.2025




இன்று நீங்கள் நம்பிக்கை நிறைந்து காணப்படுவீர்கள். உங்களின் கடின முயற்சி மூலம் வெற்றி பெறுவர்கள். புதுமையாக யோசித்து புதிய கருத்துக்களை உருவாக்க இது உகந்த நேரம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள். சிறப்பக திட்டமிட்டு உங்கள் பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நகைச்சுவையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இந்த உணர்வால் இன்று நல்லிணக்கமும் திருப்தியும் காணப்படும்.

இன்று பணம் சேமிப்பதற்கு சாதகமான நிலை காணப்படும். இன்று நல்ல வாய்புகள் காணப்படுவதால் கணிசமான தொகை வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று உங்களின் ஆற்றல் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சுமாராக இருக்கக் காண்பீர்கள். நீங்கள் விரும்பிய பலனை அடைய சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். உங்கள் இலக்குகளை எளிதாக அடைவது சிறிது கடினமாக இருக்கும்.

உங்கள் பணிகள் சுமூகமாக நடைபெற மற்றும் பணியில் நற்பலன் காண உங்கள் புத்திசாலித் தனத்தைப் பயன்படுத்த வேண்டும்.

உங்கள் மனதில் சில குழப்பங்கள் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும். எனவே பொறுமையை பராமரிக்க வேண்டும்.

இன்று சற்று இறுக்கமான நிதிநிலைமை காணப்படும். குழந்தைகளின் நலன் போன்ற அதிகரிக்கும் பொறுப்புகளுக்கு செலவு செய்ய நேரும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. நீங்கள் தைரியமாக நேர்மறை எண்ணத்துடன் இருக்க வேண்டும். உணர்ச்சிவசப்படாமல் இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். எந்த விஷயத்தையும் நட்பு முறையோடு அணுக வேண்டும்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது. முறையாக திட்டமிட்டு கவனமாக பணியாற்றவும்.

உங்களின் இனிமையான அணுகுமுறை மூலம் உங்கள் நாளை நீங்கள் சிறப்பாகஆக்க வேண்டும். உங்கள் துணையுடன் அன்பை வளர்க்க முயலுங்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.




இன்று உங்கள் நண்பர்கள் மற்றும் பரிச்சயமானவர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் நண்பர்களை மகிழ்விப்பீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் உங்கள் மீது நல அபிப்பிராயம் ஏற்படும்.

உங்களின் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். நிதி நிலைமை செழிப்பாக இருக்கும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்கக் காண்பீர்கள்.முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். பக்தியில் ஈடுபடுவதற்கும் இறை வழிபாட்டிற்கும் உகந்த நாள். கடின உழைப்பின் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். உங்கள் திறமைகளை பணியிடத்தில் நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உறவை உருவாக்க முடியும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் தேவைப் பட்டால் கடன் பெறலாம்.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் ஆறுதல் தேடி கோவிலுக்கு செல்வீர்கள். இன்றைய நாள் சீராக செல்ல நீங்கள் சற்று விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.பிரார்த்தனை மேற் கொள்வது ஆறுதல் அளிக்கும்.

உங்கள் பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள திட்டமிட்டு செயல் புரிய வேண்டும். பணியில் கெட்ட பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாகப் பணிகளைக் கையாள வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இத்தகைய உணர்வை தவிர்த்து மகிழ்ச்சியை பராமரிக்க வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் காணப்படும். உங்கள் மதிப்பு வாய்ந்த பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியது அவசியம்.




இன்று நீங்கள் ஓய்வாக இருக்க வேண்டிய நாள். மகிழ்ச்சியை அளிக்கும் சூழ்நிலை இருந்தாலும் நீங்கள் அமைதியின்றி காணப்படுவீர்கள். இது உங்களை பாதிக்கும். நல்ல பலன்களைக் காண மகிழ்ச்சியாகவும் நம்பிக்கையுடனும் இருங்கள்.

பணியிடத்தில் ஸ்திரமான சூழல் இருக்காது. பணியின்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பான உணர்வுகளை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இன்றைய நாளை இனிமையாக மகிழ்ச்சியாக வைத்திருக்க இது மிகவும் அவசியம்.

இன்று பணம் எளிதில் கிடைக்காது. பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும்.உங்கள் இலக்குகளை அடைவதற்கு இன்று கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்களின் இனிமையான தொடர்பாடல் திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு உள்ளது. பயணம் அல்லது வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு உள்ளது. உங்கள் சுய வளர்ச்சிக்கு இன்றைய நாளை பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

இன்று சமநிலையான மன நிலையில் காணப்படுவீர்கள். உங்களின் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையின் இதயத்தில் இடம் பெறுவீர்கள்.

பண வரவு அபரிமிதமாக இருக்கும். நீங்கள் பயனுள்ள விஷயங்களுக்கும் குடும்பத்திற்கும் பணம் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.03.2025




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். உங்களின் எதிர்மறை சிந்தனை காரணமாக நீங்கள் பாதகமான விளைவுகளை சந்திப்பீர்கள். பிரார்த்தனை மற்றும் தியானம் நல்ல பலனளிக்கும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது.

உங்களிடம் மனக்குழப்பம் காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுதுவீர்கள். உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

உங்கள் விருப்பங்கள் நிறைவேற இன்று உகந்த நாள் அல்ல. நிதி வளர்ச்சியில் கட்டுப்பாடு காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் பாதுகாப்பின்மை உணர்வுடனும் தனிமையாகவும், அவநம்பிக்கையுடனும் காணப்படுவீர்கள். நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். முன்கூட்டியே திட்டமிட்டு பணி புரிவதன் மூலம் சிறந்த பலன் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உங்கள் கருத்துகளை வெளிப்படையாக பகிர்ந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.

இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. மருத்துவ செலவிற்காக நீங்கள் கூடுதல் பணம் செலவு செய்ய நேரும்.

இன்று நீங்கள் ஆரோக்கியத்தில் கவனம் கொள்ள வேண்டியது அவசியம்.




நீங்கள் நன்மை அடைந்தாலும் அதில் உங்களுக்கு திருப்தி இருக்காது. வெறுமையை உணர்வீர்கள். இன்று உங்கள் இலக்குகளை அடைவதில் தடைகள் காணப்படும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதைக் கடினமாக உணர்வீர்கள். பணிகளை குறித்த நேரத்தில் மேற்கொள்வதிலும் தாமதம் காணப்படும்.

உறவில் காணப்படும் கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் புரிந்துணர்வுப் பிரச்சினை காணப்படும்.

நிதி நிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இல்லாத காரணத்தால் பண வரவு காணப்படாது.

மன உளைச்சல் காரணமாக இன்று நீங்கள் தொடை வலியால் அவதிப்பட நேரலாம்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் இலக்குகளை அடைவதற்கு அதிர்ஷ்டம் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும். அது உங்களுக்கு மனநிறைவை அளிக்கும். மூத்தவர்கள் மற்றும் நலம் விரும்பிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். உங்களின் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.

இன்று உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் வாழ்க்கை பற்றி உங்கள் துணையிடம் கலந்தாலோசிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் நண்பர்களிடமிருந்து எதிர்பாராத பரிசாக பணம் கிடைக்க வாய்ப்புள்ளது.




# மட்டு. வைத்தியசாலையில் பெண் வைத்தியர்களுக்கு தொலைபேசி ஊடாகத் தொல்லை தந்த மர்ம நபர்!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்த பெண் வைத்தியர்களை குறிவைத்து தொலைபேசி ஊடாக மர்மநபர் ஒருவர் அநாகரிகமான வார்த்தைகளால் பேசி அவர்களை குழப்பமடைய வைத்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இடம் பெற்றுள்ளதையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக தெரியவருவதாவது:-

வைத்தியசாலை தொலைபேசி பரிவத்தனை நிலையத்துக்கு நேற்று அதிகாலை 2.00 மணிக்கு இனம் தெரியாத மர்ப நபர் ஒருவர் தொலைபேசி அழைப்பை எற்படுத்து கொண்டு சில வாட்டுக்களுக்கு தொலைபேசி அழைப்பை மாற்றுமாறு கோரியிருக்கின்றார். அந்த அழைப்புக்கள் மாற்றப்பட்டதையடுத்து அந்த மர்மநபர் அங்கு கடமையில் இருக்கின்ற வாட் பொறுப்பாளர் மற்றம் பெண் வைத்தியர்களின் கையடக்க தொலைபேசிகளை பெற்று அவர்களுடன் 0760291757 கொண்ட இலக்கம் ஊடாக தொடர்பை ஏற்படுத்தி அநாகரிகமான முறையில் பேசியுள்ளார்.

இவ்வாறு அதிகாலை 2.00 மணி தொடக்க காலை 6.00 மணிவரை 13 பேருடன் தொடர்பை ஏற்படுத்தி அவர் குழப்பத்தை ஏற்படுத்தியமையை அடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட வைத்தியர்கள், பொறுப்பாளர்கள் வைத்தியசாலை பணிப்பாளரின் கவனத்திற்கு இதனைக் கொண்டுவந்தனர். இது தொடர்பாக பொலிஸ் நிலையத்திலும் சைபர் கிரைம் பிரிவிலும் முறைப்பாடுகளைச் செய்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் அறிவதற்காக வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் உதவி பணிப்பாளர்களை தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை.